வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1994 தை திங்கள் 28-ம் நாள் (10—2—1963) ஞாயிற்றுக்கிழமை றம்ழான் 14 | இதழ் 37




தமிழ் பேசுவோருக்கு

# சேனையில் இடம் கிடையாது

## தேர்வுக்கு வந்த இருவருக்கும் கைவிரிப்பு

இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பதில் பாரபட்சம் காட்டப்படுகிறதென்றும், சிங்களவர்கள் மட்டுமே இராணுவத்தில் சேர்க்கப்படுகின்றனரென்றும் தகவல் கிடைத்துள்ளது.

இம்முறை பட்டாளத்துக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைவரும் சிங்களவரென்றும், இரு தமிழ் வாலிபர்கள் தவறுதலாக நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, பின்னர் தமிழர் என்ற காரணத்துக்காக வீட்டுக்கு அனுப்பப்பட்டனரென்றும் அறியப்படுகிறது. தமிழர்களுக்கு இராணுவ உத்தியோகங்கள் கிடையா என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பட்டாளத்துக்கு ஆள் சேர்ப்பதில் தமிழர்களை 'தீண்டத் தகாதவர்களென' அடியோடு ஒதுக்கும் ஓர் இன பேத ஒதுக்கல் கொள்கையை ஆட்சியாளர் அனுஷ்டித்து வருகின்றனர் என்பது தெளிவாகியுள்ளது.

இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பதற்காக விளம்பரம் செய்யப்பட்டதும் ஏராளமான தமிழ் பேசும் வாலிபர்களும் மனுச் செய்தார்கள்.

கடைசியில் சிங்களவர்கள் மட்டுமே பட்டாளத்திற்குச் சேர்க்கப்பட்டார்களென்று நம்பகமாக அறியப்படுகிறது.

சிங்களவர்களுடன் இரு தமிழர்களை மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டார்களாம்.

மற்றத் தமிழ் இளைஞரோ சிங்களம் கற்றவர். சிங்களம் கற்றும் பயனில்லை. தமிழராதலின் பட்டாளத்தில் இடமில்லையென அவர் வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டாராம்.

பெனடிக் என்ற இளைஞர் மன்னாரைச் சேர்ந்தவர். பெயரைப் பார்த்ததும் சிங்களவர் என்று கருதி நேர்முகப்பரீட்சைக்கு அழைத்துவிட்டார்கள். பின்னர்தான் தெரிந்தது அவர் தமிழர் என்ற "இரகசியம்".

நேர்முகப் பரீட்சை நடத்திய சிங்கள அதிகாரிகள் மன்னாரில் தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகள் பற்றி திரு. பெனடிக்கிடம் கேள்வி மேல் கேள்வி போட்டு விசாரித்ததாகவும், பின்னர் தமிழர்களுக்கு இராணுவத்தில் இடமில்லையென்றும், தமிழர்களைப் பட்டாளத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)




யாழ். கோட்டை மைதானத்தில், மறைந்த மாபெரும் தலைவர் அண்ணல் வன்னியசிங்கத்தின் அரங்கில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் 9-வது தேசிய மாநாட்டின் கடைசி நாள் நிகழ்ச்சியின் ஆரம்பத்தில், மலையகத்தைச் சேர்ந்த செல்வன் அருளானந்தம் தேசிய கீதம் பாடுவதையும், இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள், இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணித் தலைவர்கள் ஆகியோரையும் படத்தில் காண்க.

## வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைப்பதா?

### சிங்களம் படிக்காதிருங்கள்

### எஸ். ஜே. வி. மீண்டும் வேண்டுகிறார்

சிங்களம் படிக்காதிருந்து நீங்கள் காட்டிய ஏகோபித்த எதிர்ப்பை அரசாங்கம் உணர்ந்து வருகின்றபோது சிங்களப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது வெண்ணெய் திரண்டுவரும் போது தாழி உடைந்து விடுவதுபோலுள்ளது. இப்போதிருக்கும் சூழ்நிலையில் சிங்களம் படியாதிருக்க வேண்டுமென்று திரும்பவும் வேண்டுகிறேன்.

இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறிமாவோ அரசாங்கத்தின் சிங்களத் திணிப்பு நாளுக்குநாள் வலுவடைந்து வரும் இந்நேரத்தில் தமிழ் பேசும் மக்களனைவரும் ஏகோபித்த

(8-ம் பக்கம் பார்க்க)

## குடியேற்றத்தில் புதிய திருப்பம்

தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் முயற்சி திட்டவட்டமான முறையில் புதிய ரீதியில் நடத்தப்படுகிறது. இது

(8-ம் பக்கம் பார்க்க)

# பொலீசார் மீது வழக்கு

## உதவிப் பாதுகாப்பு மந்திரி மௌனம்

மந்திரி இலங்கரத்னாவுக்கு கறுப்புக் கொடி காட்டிய மக்கள் மீது பொலிசார் நடாத்திய மிருகத்தனமான தாக்குதலை எதிர்த்து தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சட்ட நடவடிக்கை எடுப்பதாக முடிவு செய்துள்ளார்கள். பொலிசாரின் நடவடிக்கையையிட்டு மக்கள் சபையில் விரிவான அறிக்கை சமர்ப்பிப்பதாகக் கூறிய சபை முதல்வர் இப்பொழுது விடயத்தைத் தட்டி கழித்துவிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் 5ம் திகதி மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின யாழ் நகருக்கு விஜயம் செய்த பொழுது தமிழரசுக் கட்சியினர் கறுப்புக் கொடி எதிர்ப்புக் காட்டினார்கள் அல்லவா? அந்நேரத்தில் இந்நாட்டின் அமைதியைக் காக்க வேண்டிய பொலீசார், அதற்குப் புறம்பான முறையில் எதிர்ப்புக் காட்டிய மக்கள் மீதும், தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் மிருகத்தனமான முறையில் தாக்குதல் மேற்கொண்டார்கள்.

இவ்விடயம் சம்பந்தமாக 11ம் திகதி கூடிய பாராளுமன்றத்தில் பிரச்சினை எழுந்த பொழுது சபை முதல்வர் திரு.சி.பி.டிசில்வா மறுதினமே பாராளுமன்றத்தில் ஓர் அறிக்கை சமர்ப்பிப்பதாகக் கூறினார். ஆனால் இற்றைவரை அறிக்கை எதுவுமே சமர்ப்பிக்கப்படவில்லை.

இது சம்பந்தமாக கடந்த வியாழக்கிழமை மக்கள் சபை கூடியபொழுது ஊர் காவற்றுறைப் பிரதிநிதி திரு வீ. ஏ. கந்தையா பாராளுமன்றத்தில் சபை முதல்வரை வினவியபோது அவர் தட்டிக்கழிக்க முற்பட்டார். வட்டுக்கோட்டைப் பிரதி

(8-ம் பக்கம் பார்க்க)

தமிழ் பேசும் மக்களுக்கு

# மத்திய வங்கியில் கதவடைப்பு

மத்திய வங்கியும் தமிழர்களுக்கு கதவடைத்துவிட்டது. அரசாங்கத்தின் இதர இலாகாக்களைப் போன்று மத்திய வங்கி உத்தியோகங்களும் சிங்களவர்களுக்கே கொடுக்கப்படுகிறதென அறியப்படுகிறது.

அண்மையில் மத்திய வங்கி சேவைக்காக மனுச் செய்தவர்களில் சுமார் 85 சத விகிதம் பேர் சிங்களவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். அவர்கள் எல்லோரும் சிங்கள எஸ். எஸ். ஸி தேர்ச்சி பெற்றவர்கள். எஞ்சிய 15 சத விகிதம் பேரும் கூட ஆங்கில எஸ். எஸ். ஸி. தேர்ச்சி பெற்றவர்கள்தாம். ஒருவர் பட்டதாரியாம். தமிழ் எஸ். எஸ். ஸி. தேர்ச்சி பெற்றவர் ஒருவர் கூட அழைக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

சேவைக்கு 30 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

## புதுமைகள் பல நிறைந்த சங்கானைப் பட்டின சபை

தமிழ்ப் பிரதேசத்தில் கொம்யூனிஸ்டு நிர்வாகத்தில் இயங்கும் ஒரேயொரு உள்ளூராட்சி மன்றம் சங்கானைப் பட்டின சபை. ஊழியர்கள் சிங்களம் படிப்பதற்கு கடமை நேர விடுமுறை வழங்கிய, தமிழ்ப் பிரதேசத்திலுள்ள ஒரேயொரு உள்ளூராட்சி மன்றமும் இதுவேயாகும். பெரும்பான்மை உறுப்பினரின் எதிர்ப்பின் மத்தியிலும் பதவியில் அட்டைபோல் ஒட்டிக்கொண்டிருக்கும் தலைவரையுடைய சபை இலங்கை முழுவதிலும் இது ஒன்றேதான். 1963 ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தை சபைக்குச் சமர்ப்பிக்காமல் இருக்கும் இப் பட்டின சபையின் நிர்வாகத்தின் மீது ஆட்சியாளர் எவ்வித நடவடிக்கையும் இன்று வரை எடுக்கவில்லை. காரணம் என்ன? தமிழ்ப் பிரதேசத்திலுள்ள, உள்ளூராட்சி மன்றங்களில் ஊழியர்கள் சிங்களம் படிப்பதற்கு கடமை நேர விடுமுறை வழங்கிய ஒரேயொரு நிர்வாகம் என்பதற்காகவா? அல்லது தமிழ்ப் பிரதேசத்தில் கொம்யூனிஸ்டுகள் தலைமையில் இயங்கும் ஒரேயொரு உள்ளூராட்சி மன்றம் என்பதற்காகவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதமென்ன சிங்களமோ?

“மதியழகன்”

இலக்கியம் என்பது உணர்ச்சியின் பிரதிபலிப்பே ஆகும். ஆம்! மீன்பாடுந் தேன் நாடாம்—கிழக்கு மாவட்டத்தில் கன்னியரும், காளையரும், மீனுங்கூடப் பாடுகின்றன. கவிதை பிறக்கிறது. காரணம் அத்தனை உணர்ச்சி.

நாமறிந்த நாட்டொட்டு கிழக்குப் பிரதேசத்தில், வடக்கும், தெற்கும் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைபோல் வாழ்வதைக் காணலாம். கிராமங்களும் அப்படியே அமைந்துள்ளன.

மட்டு நகரிலிருந்து வடக்கே எட்டு மைல் தொலைவில் உள்ள பட்டணந்தான் ஏறுவூர். இங்கு வசிக்கும் மக்களில் பெரும்பான்மையோர் முஸ்லிம் மக்கள். இவர்களில் ஆண்கள் விவசாயத்திலும், வர்த்தகத்திலும், உத்தியோகத்திலும் ஈடுபட்டுள்ளனர். பெண்கள்கூட வீட்டுத்தொழில்—கைவேலைகள் செய்வதில் மிகவும் சிரத்தையுள்ளவர்கள்.

ஏறுவூரிலிருந்து ஐந்தாவது மைலிலுள்ள கிராமந்தான் சித்தாண்டி. மிகவும் எழில் மிக்க கிராமம். இராச கோபுரம் கம்பீரமாக உயர்ந்து விளங்க, அழகு முருகன் அமர்ந்திருக்கும் ஆலயம் அக் கிராமத்தின் அழகுக்கு அழகு செய்கிறது. இங்கு வசிக்கும் அத்தனை பெருங்குடி மக்களும் சைவ வேளாளர். கார்கண்டு ஏர் பிடித்துக் களனி செய்வோர். இங்கு—

பரந்து விரிந்து கிடக்கும் வயல் வெளிகள் ஒரே பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கும். எங்கும் ஒரே பசுமை. சித்திரை-வைகாசி மாதங்களில் முன் மாரி வேளாண்மை அறுவடை நடைபெறும். இவ் வேளை நெல்லுடன் வளர்ந்த ‘பன்’ புல்லை அறுவடை செய்து, பாய், பெட்டி, தட்டு இழைப்பது முஸ்லிம் பெண்களின் ஓய்வு நேரப் பொழுது போக்கு—தொழில்.

இவ்வேளை நடந்த ஒரு நிகழ்ச்சிதான் இந்தக் கிராமியக் கவிதையாக நமக்குச் சுவையூட்டுகிறது. பன் புல்லைப் பெரும்பாலும் பெண்களே அறுப்பார்கள். ஆண்கள் அவற்றைக் கட்டுக்கட்டாகக் கட்டி, வண்டிகளிலே ஏற்றிக் கொண்டு வீட்டுக்குச் செல்வார்கள்.

அன்று ஒருநாள்!

அதிகாலை நான்கு மணியளவில் ஏறுவூரிலிருந்து சித்தாண்டிக்கு வந்து புற்கட்டுக்களை வண்டியிலே ஏற்றிக் கொண்டு புறப்பட்டான் இஸ்மாயில். அவன் மாமி வீட்டைக்கடந்தே தன் வீட்டுக்குப் போக வேண்டும். இவ்வேளை—

தெருவால் வண்டியில் சென்ற இஸ்மாயில் தனது மாமி மகள் கிணற்றடியிற் குளிப்பதைக் கண்டான்.

பொழுதையும் பார்த்தான்: அவனுற் சும்மா போக முடியவில்லை. எப்படி முடியும்? தனது உள்ளங் கவர்ந்தவளைக் கிண்டல் செய்ய எண்ணிப் பாடினான்:

“மாமி மகளே மார் கெட்ட
தமிழிச்சி
வெயிலேறித் தண்ணி வாக்க
ஒண்ட வேதமென்ன—
சிங்களமோ?”

—என்று தனது கட்டைக் குரலில் பாடினான். அவளுக்குப் புரிந்து விட்டது. ஆருயிர் அத்தான் இப்படிப்பாடுகிறான் என்று.

(15-ம் பக்கம் பார்க்க)

இலக்கியம்:

## தோழியின் கடுஞ் சொல்லும் இனிக்கிறதே!

— தேனீ —

வாழ்க்கையில் நடப்பதெல்லாம் எமது சிற்றறிவுக்கு எட்டிவிடும் விஷயங்களாக அமைந்து விடுவதில்லை.

காதல் விஷயத்திலும் கூட, அப்படித்தான் இருக்குமோ?

அவன் காதலிக்கும் பெண்தான் அவனைக் கண்டவுடன் நாணம் எய்துகிறாளென்றால், அவளுடைய தோழி ஏன் இவன் மீது கோபம் கொள்ள வேண்டும்.

முதலில், அவனுக்கு ஏன் என்று புரியவில்லை.

ஆனால்..............

சிந்தித்துப் பார்த்த பிறகு, தோழியின் கோபத்தில் நல்நோக்கமுண்டு, அதுவும் தம் பக்கம் தான் இருக்கின்றது என்ற உண்மை அவனுக்குப் புரிந்தது.

தான் காதலிக்கும் தமிழ்க் குலக் கொடியை, இன்பம் தரும் இளந் தளிரை, இனியவளை—அடைவதற்கு அனுகூலமாகவே, தோழியின் கோபம் அமைகின்றது என்பது அவனுக்கு விளங்குகின்றது.

ஆகவே, அவன் நினைக்கிறான்: ‘உண்மையில் உள்ளத்தில் பகை உணர்ச்சி இல்லாத ஒருவன், கடும் சொற்களைக் கூறினாலும், அவை ஈற்றில் பயன் தரும் சொற்களாகவே மாறும் பண்பு வாய்ந்தவை’—என்று.

தோழி சொல்கிறாள் அவனிடம்: ‘இங்கு காவலுண்டு; கட்டுப்பாடு உண்டு; அருகில் வரவேண்டாம்’ என்று.

அவனுக்கு அச் சொற்களின் தன்மை விளங்கி விட்டது. தலைவியைத் தனக்குத் தானம் செய்யத் தோழியின் முன்னேற்பாடுதான் இதுவென்று அவன் விளங்கிக் கொள்கிறான்.

இதை அவன் வெளியிடுகிறான் இவ்விதம்:

உறுஅு தவர்போற் சொலினுஞ் செறுஅர்சொல்
ஒல்லை யுணரப் படும்.

## கையாலே பொன் தாலி கட்டிடுவேன் கண்மணியே!

—பாண்டியூரன்—

மண்ணாவி வளர்ந்த ‘மையோரி’ச் சேனைக்கு மத்தியிலே ஓர் காவற்பரண். அவன் அந்தப் பரண்மீது காவலுக்காகப் படுப்பான். அவள் பக்கத்துச் சேனையில் உள்ள ‘புரை’யில் பெற்றோரோடு வசித்து வருகிறாள். முன்பெல்லாம் இருவரும் ஒன்றாகக் கல்லாற்று நாவற்காட்டுள் ஆடு மேய்ப்பது வழக்கம். இன்று ‘படுவாங்கரை’யில் ஒருவருக்கொருவர் அண்மையில் வசித்து வருகின்றனர். ஆனாலும் இருவரும் பகிரங்கமாகச் சந்திக்கவோ, முன்போற் பழகவோ வாய்ப்பு இல்லை. அவள் பருவமடைந்த பாவையல்லவா? பெற்றோர், ‘கட்டுக்காவலாக’ வைத்திருந்தனர்.

கிராமிய இலக்கியம்

இருவரிடையிலும் காதல் மட்டும் எண்ணெய் விட்ட தீபோல் வளர்ந்து வந்தது. ஆற்றங் கரையிலே இருவரும் அந்தரங்கமாகச் சந்தித்து வந்தனர். அன்றும் அவள் வழமை போல் பூவலுக்குத் தண்ணீர் அள்ளக் கப் போனாள்; அவனும் குளிக்கப் போனான்; இருவரும் சந்தித்தனர். அவர்களது உரையாடல் உள்ளத்தைக் கிளறும் கவியாகப் பரிணமித்தது. இதோ பாருங்களேன் அவள் அவனை மறக்க முடியாதென்பதற்குச் ‘சாட்டு’ச் சொல்லுகிறாள்.

கல்லாற்று நாவமரம்
கறுப்பெறிஞ்சி காச்சதுபோல்-
-மச்சான்
கன்னத்து மீசை என்ர
கண்ணுகுள் சுத்துநுகா!

நெளிந்து வளைந்து நெஞ்சிலே உள்ளதைச் சொல்லி விட்டாள். காட்டில் வாழும் நாட்டுப் புறப் பெண்ணாக இருந்தாலும் நாணம் இல்லாமற் போகுமா? அவனுக்கு அவ்வளவில்லைக் ‘கிளுகிளுப்பு, கொல்லென்று வந்த சிரிப்பு அவனது

(10-ம் பக்கம் பார்க்க)


ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து சதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் “ஆனந்தா தைலத்தை”த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


## அரும்பிவிட்ட காதலை அழிக்க அன்னையால் முடியுமா?

கோவை — மகேசன்

மன்னன் கோதை மீது மங்கை கொண்ட காதல் நாளுக்கு நாள் வளர்கிறது. இவளுக்குத்தான் அவன் மீது காதலே தவிர அவனுக்கு இவள்மீது காதல் கிடையாது. தனியொருத்தி கொண்ட ஆசைக்குப் பெயர் காதலாம்!

அல்லும் பகலும் அவனையே நினைத்து உருகினாள். கண்களில் நீர் பெருகியது. உள்ளமோ காதலில் மூழ்கியது. காதல் நோயால், கைவளை பெருத்தது. இளமை நலன் அழிந்தது.

அவளுடைய மாந்தளிர் போன்ற மேனி, மாறிவிட்டது! மேனியெங்கும் பொன்னிறம் போன்ற பசலை படர்ந்தது.

ஒருநாள், ஊரார் கேட்கும் படியாகப் பிதற்றினாள் தன் காதலைப் பற்றி! ஊராரே கேளுங்கள்! இந்த வழியால் திருவுலா வந்த மன்னன் மீது, என் நெஞ்சம் சென்றது. அவன் பின்னே சென்ற நெஞ்சை என்னால் மீட்டு வரமுடியவில்லை! என் நெஞ்சம் நெருப்பாக எரிகிறது. அதை என்னால் தாங்கிக் சொள்ள முடியவில்லை. இந்த நெருப்பு என்னை எரித்துவிடும் போலிருக்கிறது. இதை அணைக்க நீங்கள் தான் ஒரு வழி சொல்ல வேண்டும்.

மங்கையின் இந்த பிதற்றல், ஊராருக்குக் கேட்கவில்லை. ஆனால் பெற்ற அன்னைக்குக் கேட்டது. அன்னைக்கோ மகளின் நிலை குறித்து தாங்கொணாத வருத்தம்.

அதோ, தூரத்தில் முரசு முழங்குகிறது! அந்தச் சத்தம் தேனாக இனிக்கிறது பாவைக்கு!

ஏன் தெரியுமா?

மன்னன் அந்த வழியாக உலா வருகின்றான் என்பதன் அறிகுறி அது! தன்னை, இந்த நிலைக்கு ஆளாக்கிய மன்னன், இன்று இந்த வழியே வருகின்றான் என்ற மகிழ்ச்சியில், உள்ளே ஓடினாள். அவள் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது. ஏதோ இனம் தெரியாத உவகை!

‘இன்று எப்படியென்றாலும் என் காதலை அவரிடம் சொல்லி விட வேண்டும் கண்ணால்’ என்று தன் மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

சீவி முடித்தாள்! சிங்காரித்தாள். நெற்றியிலே திலகம் வைத்தாள். நீள் குழலில் மலர் சூடினாள்.

வானத்து மேனகையோ, வையகத்து ஆரணங்கோ, என்னும்படி கண்ணாடியின் முன் நின்று தன்னை சீர்செய்து கொண்டாள்.

முரசு முழக்கம் நெருங்கி விட்டது!

அவள் வீட்டருகில் ஊர்வலம் வந்து விட்டது.

வாசலை நோக்கி ஓடினாள் வாலைக் குமரி!

அங்கே!

ஐயோ பாவம்! ஏமாற்றம்!

கதவு இறுக்கிப் பூட்டப்பட்டிருந்தது.

பலங்கொண்டமட்டும் தள்ளிப் பார்த்தாள்!

பூங்கொடியாளுக்கு பூட்டிய கதவை உடைக்கும் வலிமை உண்டா?

“அம்மா! அம்மா! சாவி எங்கே! கதவைத் திற! மன்னரைப் பார்க்க!”

“நீ பார்க்க முடியாது” என்று அன்னை திடமாகக் கூறி சாவியை இடுப்பில் சொருகிக் கொண்டாள்.

கன்னி கண்ட கனவு பகற் கனவாகியது!

எத்தனையோ எண்ணி வந்தவளுக்கு ஏமாற்றம் கிடைத்தது!

அவள் வீட்டைத் தாண்டி, மன்னனின் ஊர்வலம் போய்விட்டது!

அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. சூடியிருந்த மலரைப் பிடுங்கி எறிந்தாள்.

‘தாய் இத்தனை கொடியவளா?’ என்று எண்ணி ஏங்கினாள்,

தாயின் மீது சினந்தாள்.

சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

பின்னர் திடீரென்று ‘கலகல’ வென்று சிரித்தாள்.

‘ஏனடி சிரிக்கிறாய், எனக்குந்தான் சொல்லேன்’ என்றாள் அப்போது அங்கே வந்த தோழி!

“இல்லையடி, நேற்று இந்த வழியாக மன்னவன் உலாவ வந்தான் அவனைப் பார்த்தேன். நெஞ்சைப் பறிகொடுத்தேன். இன்றும் அவன் இவ்வழியே வந்தான். ஆனால் இன்று என்னைப் பார்க்க முடியாமல் செய்து விட்டாள் என் தாய்! கதவைப் பூட்டி, மன்னனைப் பார்க்க முடியாமற் செய்து விட்டால் மட்டும், என் காதலை அழித்துவிட முடியுமா? அப்படிச் செய்வதால், எனது காதலை அழித்து விடலாம் என நம்பும் என் அன்னையின் பைத்தியக்காரத்தனத்தைக் கண்டுதான் சிரித்தேன்!

“கதவை மூடி விடலாம் ஆனால் என் காதலை மன்னனிடம் நேரில் எடுத்துச் சொல்லி நம்மிருவரையும் ஒன்று சேர்க்க நினைக்கும் உன்போன்ற அணங்குகளின் வாயையும், எனது அன்னையால் அடைத்து வைக்க முடியுமா?” என்று கேட்கிறாள். அவள் முகத்தில் புன்னகை படர்கிறது,

“கடல்தானைக் கோதையைக் காண்கொடாள் வீணில்
அடைத்தாள் தனிக்கதவம் அன்னை—அடைக்குமேல்
ஆயிழையாய்! என்னை அவன்மேல் எடுத்துரைப்பார்
வாயும் அடைக்குமோ தான்!”

—முத்தொள்ளாயிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனோரஞ்சிதம்-அப்பாத்துரை, சங்கானை.

கே: திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தனக்கு உதவியாக திருமதி டயஸ் பண்டாரநாயக்காவை பீக்கிங் அழைத்துச் சென்றாராம். அதே போல் நானும் எனது நண்பியை, எனது இல்வச பிரயாணச் சீட்டில் கொழும்புக்கு அழைத்துச் செல்ல அனுமதி அளிப்பார்களா?

ப: தாங்கள் ஒரு சிங்களப் பெண்ணா? தான் ஒரு சிங்களப் பெண்ணாக இருப்பதால் சிங்களப் பண்பாட்டுக்கிணங்க ஒரு பெண்ணைத் துணைக்கு அழைத்துச் சென்றதாகவே பிரதமர் கூறினாராம்.

ஃ

ந. அரசு, பதுளை.

கே: திருமதி லட்சுமி மேனனுக்கும் திருமதி சிறிமாவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: திருமதி லட்சுமி மேனன் நீண்ட கால அரசியல்வாதி. திருமதி. சிறிமாவோ அரசியலுக்குப் புதுசு அவர் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு தான் அரசியல் அரங்கில் பிரவேசித்தார்.

ஃ

"தாமரையாள்", ஏழாலை மேற்கு.

கே: மந்திரிப் பதவிக்கு வந்தவுடன் சிலர் கொழுப்பதன் மர்மம் என்ன?

ப: பணக் கொழுப்பு.

ஃ

எம். எச். எம். பாரிஸ், அம்பாறை.

கே: போலிச் சிநேகிதத்தை அறிந்த பின்னும் அவரை நாடிச் செல்வது சிறந்ததா?

ப: கூடாது. அதைத் தெரிந்து கொண்டதால் தான் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் பெரும் தலைகளையெல்லாம் உருட்டி விட்டார்கள்.

ஃ

சு. மயில்வாகனம், நுவரெலியா.

கே: நுவரெலியா மாவட்டத்தில் ஒரு தமிழரசுக் கட்சிக் கிளை திறக்க உத்தேசித்துள்ளோம். தங்கள் விருப்பம் எப்படி?

ப: உடனே செய்யுங்கள்! தமிழரசுக் கட்சி மலையகத்தில் ஒரு வளர் பிறை.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

குமாரச் செல்வன், ஏழாலை-மேற்கு.

கே: நன்றி மறந்த சிறிமாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தைக்குச் செல்வது முறையானதா?

ப: உரிமைகளைப் பெற முடியுமானால் பேய் பிசாசுடன் கூடப்பேச்சுவார்த்தை நடத்தலாம்.

ஃ

தா. குணரெத்தினம், ஏழுவூர்.

கே: அம்மையார் சமாதானத் தூது சென்றது இந்தியாவின் நன்மை கருதியா? அல்லது சிங்களவரின் நன்மை கருதி நேருவைப் பந்தம் பிடிக்கவா?

ப: "சுயநலம் கருதியே பிறர் நலம் கருதுவர்" என்ற ஓர் நாடோடி வசனத்தைத் தங்களின் கேள்வி நினைவூட்டுகிறது.

ஃ

றுஸவதா, கிண்ணியா.

கே: மூதூர் இரண்டாவது எம். பி. மேடைகளில் 'வள வள' வென்று பேசுவது போல் பாராளுமன்றத்திலும் பேசுகிறாரா?

ப: வள வளாவுக்குப் பாராளுமன்றத்தில் இடமில்லை ஐயா!

ஃ

ம. ரவிந்திரன், பொரலை.

கே: நாங்கள் நம்மைப் பற்றி பெருமை கொள்வதை சிலர் நையாண்டி செய்கிறார்களே!

ப: நாம் நம்மைப் பற்றியே பெருமைப்படத் தெரியவில்லையென்றால் பிறரைப் பற்றி எங்கே பெருமைப் படப்போகின்றோம்?

ஃ

இ. சுந்தரலிங்கம், மல்லாகம்.

கே: அஹிம்சை என்று கூறிய பாரதப் பிரதமர் நேரு கூட இப்போ சீனருடன் துப்பாக்கி கொண்டுதானே போரிட்டார்? நாம் ஏன துப்பாக்கி கொண்டு போரிட்டு நம் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடாது?

ப: அகிம்சா தத்துவத்தை நீங்கள் சரிவரப் புரிந்து கொள்ளவில்லைப் போலும்! குடல் அனுபந்த நோயைக் குணப்படுத்த அறுவைச் சிகிச்சை தேவையென்றால், உதிரம் கொட்டுவதைப் பொருட்படுத்தாமல் கத்தியால் அறுத்துத்தானாகவேண்டும். அது அகிம்சைக்கு மாறானதன்று. "ஒரு பெண்ணின் கற்பைச் சூறையாட முரடன் ஒருவன் பலாத்காரத்தைப் பிரயோகிக்கும் போது அவனிடமிருந்து தன் கற்பைக் காத்துக் கொள்ள அகிம்சை அவளுக்குப் பயன்படுமா?" என்று ஓர் அன்பர் காந்திஜியிடம் கேட்டார். அதற்கு காந்திஜி தமது 'ஹரிஜன்' பத்திரிகை மூலம் அளித்த பதில் என்ன தெரியுமா? "அவள் தன் கற்பைப் பாதுகாத்துக் கொள்ள தன் வசமுள்ள எந்த ஆயுதத்தையும் உபயோகிக்கலாம். ஆயுதம் கையில் இல்லையேல், தன் பற்களால் முரடனைக் கடித்துக் குதறியாவது அவனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். அது அகிம்சைக்கு மாறான செயலன்று."

நேருவும் அதைத் தானே செய்கிறார்! நமது சுதந்திரப் போராட்டமோ சத்தியாக்கிரகப் போராட்டம். துப்பாக்கி இரத்தமின்றி பெறக் கூடியது, இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் போன்று.

வி. ஆர். கிருஷ்ணன், நாரஹேன்பிட்டி

கே: எங்களூர் எம். பி. என்ன சொன்னாலும் தலையாட்டுகிறாரே! ஏன்?

ப: உதவி மந்திரியாக பயிற்சி பெறுகிறார் போலும்!

ஃ

செ. மகேந்திரன், அநுராதபுரம்.

கே: கோழி மேய்த்தாலும் கோர்ணமேந்து உத்தியோகம் என்றிருந்த தமிழ் மக்கள், இன்னும் அதே பல்லவியையா பாடுகிறார்கள்?

ப: கோர்ணமேந்து உத்தியோகத்துக்குச் சென்று கோழி மேய்க்க அவர்கள் இனித் தயாரில்லை. இப்பொழுது கோழிப்பண்ணையை நடத்தக்கூட அவர்களுக்குத் தெரியும். உழைப்பின் மகிமையை உணருகிறார்கள்.

## இன்பங்கள் கோடி கோடி

—"பாரி"—


அந்திவான் சிவத்து கொஞ்ச அழகிய மாலை வந்து
இங்கு பார் என்னை என்று என்னை பிடித்திழுத்த வேளை
சிரித்திடும் விழிகளோடு செவ்விதழ் மலரச் செய்து
என்னவர் நீரே என்று நகைத்தனள் அல்லி நங்கை.

மதுவினைத் தருவேன் நல்ல மணமிக உடையேன்—எனது
வெண்ணிற நகையைப் பாரீர் வேண்டிய இன்பம் காண்பீர்
என்னுயிர் நீரே என்று இளநகை பூத்து நின்றாள்
முத்தெனும் தந்தம் கொண்ட முல்லையாம் மங்கை நல்லாள்.

அழகிய முகமிருந்தென் அம்பு போல் விழி இருந்தென்
மதுவினைத்தந்து தானென் மகிழ் நகை பூத்தால் தானென்
அருகினில் மருவி வந்து அகத்தினைச் சிலிர்க்க வைக்கும்
நானல்லோ உங்கள் நாயகி என்றாள் அந்த குறும்பு செய்
தென்றல் பெண்ணாள்.

மெல்லிய முகில் திரையை மெல்லெனக் கிழித்து என்னை
கள்ளமாய் நோக்கி வெள்ளிக் கன்னத்தைக் காட்டி
என்னைப்பார் என்ற எழுத்து இள்ளகை காட்டி நின்றாள்
வெள்ளி வான் மீது வந்த வெண்ணிலா எனும் மடநதை.

இன்பத்தை ஒன்றாய்க் காச்சி இனித்திடும் தேன் கூழாக்கி
உண்ணு நீ என்று சொல்லி படைததனள் இயற்கை அன்னை
உண்டு நான் மதிமயங்கி உலகத்தை மறந்தேன்—அந்த
இன்பங்கள் கோடி கோடி அதில் எழும் எண்ணங்கள்
கோடி கோடி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

# துரோக சிவத்துடன் பேட்டி

## பத்திரிகைக் காண்டம்

(உதயகாண்டத்தில் அம்மானிடம் துரோகிகள் பல்கலைக் கழகத்தின் இளைப்பாறிய ரெஜிஸ்டர் திரு. துரோகசிவம் அதன் ஆரம்பகால சரித்திரத்தைக் கூறினர். தன் ஊர், கல்வி, மற்றும் தன்னைப் பற்றிய சகல விஷயங்களைக் கூறி முடித்து தனது வாழ்க்கையின் அடுத்த அத்தியாயத்திற்கு வருகிறார். அதுதான் அவரது பத்திரிகைப் பிரவேச காலமாகும்.)

### சினிமாப் படலம்

அம்மான்: கூடாத ஐயாவை நல்ல ஐயா என்று பூஜித்த தன் விளைவுதான் ஒரு தினசரியில் உங்களுக்கு வேலை கிடைத்ததே! அதற்கு முன் ஏதாவது பத்திரிகை அனுபவம் இருந்ததா?

துரோகசிவம்: நான் சிறிது காலம் இந்தியாவிலிருந்தேன். அங்கே சினிமா ஸ்டுடியோக்களில் வேலை பழகலாம் என்பதே என் எண்ணம்.

அ: ஓ...... அது தெரிந்த விஷயம்தானே! கமராவென்றால் உங்களுக்குத் தனிப் பிரியம்தான்.

து: அம்மான் நான் எத்தனையோ பேருக்கு டிமிக்கி விட்டவன். ஆனால் உங்களிடம் அகப்பட்டு வதைபடுகிறேன். ம்.....செய்த பாவங்களுக்கு அனுபவிக்கிறேன்....

அ: ஆமாம். சினிமாவில் நடிக்கவும் விரும்பினீர்களாமே?

து: அது ஒரு காலத்தில். ஆனால் என் முக வசீகரம் கண்ட டைரக்டர்கள், கமரா லென்ஸ் பழுதடைந்துவிடுமோ என்று பயந்து விட்டார்கள்.

அ: ஓகோ. அதன் பின் என்ன செய்தீர்கள்?

து: ஸ்டுடியோ வேலைகளை அரைகுறையாகப் படித்துவிட்டு என் ஆசானிடம் சேர்டிபிகேட் கேட்டேன். அவர்கள் பரீட்சைக்கு இருந்து பாஸ் பண்ணினால்தான் கொடுக்க முடியும் என்றார்கள். நானோ ஒரு சோதனையும் பாஸ் பண்ணாத பட்டதாரியல்லவா? இங்கு இந்தச் சில்லறைச் சோதனைக்காக ஒரே ஒரு பாடத்தை இழக்க நேரிடுமே என்று அதை விட்டு வந்துவிட்டேன்.

### மொழிபெயர்ப்பு படலம்

அ: ஆமாம் நீங்கள் முதலில் சேர்ந்த அந்தப் பத்திரிகையில் உங்களுக்கு என்ன உத்தியோகம்?

து: என் திறமை அறியாதவர்கள் என்னை தமிழ் மொழிபெயர்ப்பாளராக நியமித்தார்கள். அதாவது ஆங்கில செய்திகளைத் தமிழில் மொழிபெயர்த்தல்தான் என் கடமை.

அ: மொழி பெயர்ப்பு வேலை என்ன ஆயிற்று?

து: அதையேன் கேட்கிறீர்கள். அப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தவருக்கு நான் கொள்ளி வைக்கப் பார்த்தேன். ஆனால் அவர் என்னை விட 100 மடங்கு சமர்த்தர். எனக்குப் 'படலை'யைக் காட்டி விட்டார்.

அ: உங்களை வெளியேற்றி விட்டாரா? அது சுலபமானதல்லவே. ஏதாவது எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டீர்களோ?

து: ம்...... அப்படித்தான் நடந்தது. அந்தச் சூழியன் ஒரு மிகவும் கஷ்டமான ஒரு ஆங்கிலகட்டுரையை மொழி பெயர்க்கக் கொடுத்தார். நானோ சி-ஏ-டி—CAT—பூனை, ஆங்கிலம் படித்தவன். உண்மையிலே திணறிப்போனேன். உள்ள அகராதி எல்லாம் பார்த்ததுதான் மிச்சம். ஆனால் மொழிபெயர்க்க முடியவில்லை. ஒரு மாதிரி அதனை முடித்துக் கொடுக்க, அந்தப் பாவி அதனை பத்திரிகை மேற்பார்வையாளருக்கு அனுப்பி விட்டான்.

அ: அவர்கள் என்ன கூறினர்கள்?

து: "வேறு என்ன பெயர் கொண்டாவது இதை அழைக்கலாம். ஆனால் இது மொழிபெயர்ப்பென்று மட்டும் கூற முடியாது" என்று.

அ: அப்படியானால் உங்களை அறியாமலேயே விஷயத்தைத் திரித்து விட்டீர்களோ?

து: பின்புள்ள காலத்தில் தானே நான் திரிக்கப் பழகினேன். இது நடந்த காலத்தில் எனக்கு அந்த அனுபவமில்லை.

அ: நீங்கள் மிகவும் மன வருத்தப் பட்டிருப்பீர்கள்?

து: என்ன மன வருத்தம்? ......அந்தச் சம்பளமும் வேலையும்-—எனக்குப் பெரிசோ?

அ: என்ன சம்பளம் கொடுத்தார்கள்?

து: ஒரு 150க்குள் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

அ: (புன்சிரிப்புடன்) ஒரு 120 என்று கூறலாம், இல்லையா? அதன் பின் என்ன நடந்தது?

து: வேறு ஒரு உத்தியோகம் தேடினேன். என்னுடைய ஒ. சோ. பா. பட்டத்தையொருவரும் மதிக்கவில்லை. கடைசியாக பெரிய 'எப்டன்' தரகர் ஒருவரைப் பிடித்து, எனக்காகக் கள்ள 'ரெக்கமன்டேசன்' கொடுக்கச் செய்து வேறொரு தினசரியுள் புகுந்து கொண்டேன்.

அ: அவர்கள் கல்வியறிவு, தராதரங்கள் பற்றி எதுவும் விசாரிக்கவில்லையா?

து: கேட்டார்கள். உண்மையைச் சொன்னால் வழியில்லையென்று கண்டு அண்டப்புழுகொன்று அவிழ்த்து விட்டேன்.

அ: அண்டப் புழுகா?

து: ஆம். நான் இந்தியாவில் வாழ்ந்த நாட்களில் 'கல்கி' போன்ற பெரிய எழுத்தாளர்கள் மத்தியில் வாழ்ந்து எழுதப் பழகினேன் என்று கூற, அவர்களும் பரிட்சித்துப் பார்க்கலாம் என்று என்னை ஆசிரியராக்கினர்கள்.

அ: அந்தப் பத்திரிகை நன்றாக ஓடியதா?

து: நான் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் அந்தத் தினசரி வாரப் பத்திரிகையானது.

(தொடரும்)

(அடுத்த இதழில்-திருவிளையாடல் காண்டம்)

## வரவேற்பின் சூத்திரதாரி

துரோகிகள் கூட்டத்தாருக்கு மக்கள் மத்தியில் நிலையான மதிப்புக் கிடைப்பதில்லை. மக்களினால் அரசியல் அரங்கத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்ட அரசியல் அமங்கலியான ஒருவர் தமது துரோகச் செயல்களுக்காக அவ்வப்போது பெற்றுவரும் சன்மானங்களில் ஒன்றாக அமைந்திருந்தது அவர் சமீபத்தில் மேற்கு நாடுகள் சென்ற இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் இடம் பெற்றது.

தண்டச்சோறு உண்டு வாழும் தாசன் ஒருவரின் நாசக் குரலும், துரோகிகளின் அடிவருடி, சுய காரியம் பார்க்கும் சூழ்ச்சியாளரும் சேர்ந்து தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமைக்கும் இலட்சியப் பிடிப்புக்கும் வேட்டு வைக்க பத்திரிகைத் தலைப்புகளில் உருவாக்கிய "ஏதோ ஒரு பாதுகாப்பு முன்னணி" ஏதோ ஒரு ஊரில் உயிர் வாழ்வதாகக் கூறிப்பிற பகுதித் தமிழ் பேசும் மக்களை ஏமாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகள், நடத்திய கபட நாடகங்கள் — தகிடுதத்தங்கள் — அத்தனையும் படுதோல்வி அடைந்தன.

இந்தப் பாதுகாப்பு முன்னணி இனத்துரோக வீரருக்கு பொது வரவேற்பளிக்கப்போவதாக இரகசிய அறிக்கை ஒன்றினை அப்பாவிப் பத்திரிகை நிருபர்களுக்கு அனுப்பிப் பத்திரிகையில் விளம்பரம் பெற்றுக்கொண்டவர்கள், பொது மக்கள் முன்னிலையில் தாங்கள் யார்? தங்களுக்கும் அவ்வூர் மக்களுக்கும் உள்ள தொடர்பு என்ன? என்பதைப் பொது மக்களுக்கு விளக்க முடியாமையினால் சில தனிப்பட்ட நபர்களுக்குக் கடிதம் எழுதினார்கள்—தாங்கள் அந்த நபருக்கு வரவேற்பு அளிக்கப் போவதாக! உள்ளூரிலே பொது வரவேற்பளிக்க எவரும் முன்வராததால் விலாசமில்லாத பேர்வழி—தான் தோன்றித் தம்பிரான் ஒருவர்—கைச்சாத்திட்டு சில தனிப்பட்ட நபர்களுக்கு அழைப்பு விடுத்தார். ஆனாலும் பத்திரிகைத் தலைப்புக்களில் கட்சி நடத்தும் கபட வேடதாரிகள் பொது வரவேற்பளிப்பதாக ஒரு துண்டுப் பிரசுரத்தை அச்சடித்து பொது மக்களிடம் விநியோகிக்காமல், சில தனிப்பட்ட நபர்களிடம் மட்டுமே கொடுத்தார்கள்.

இந்த அழைப்பிதழிலும் அந்தப் பாதுகாப்பு முன்னணியின் பெயர் காணப்படவில்லை. இந்த அழைப்பிதழ் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படாததற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

பொது மக்களை வரவேற்பில் கலந்துகொள்ளும்படி [illegible] பொது மக்களில் யாரையேனும் வர வைத்துவிடலாம் என்ற நப்பாசையால் பல கதைகளைக் கட்டி விட்டிருந்தார்கள். அதில் முக்கியமானது தமிழ் பேசும் மக்களின் விடுதலை இயக்கத்தில் அக்கறை கொண்டுழைக்கும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் கிழக்கிலங்கைப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் பொது வரவேற்பில் கலந்துகொள்வார்களென்பதுதான். இந்த வதந்தியைக் கேள்விப்பட்ட பொது மக்கள் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்ய முனையவே, பொது மக்களுக்குத் துண்டுப் பிரசுர விநியோகம் செய்வதில்லை என்ற நல்ல முடிவுக்கு வந்தார்கள்.

பொது வரவேற்பளிக்கப் போவதாக சம்பந்தப்பட்ட பிரமுகரிடம் கூறிவிட்டு, கடைசியில் மூக்குடை படுவதைத் தடுக்குமுகமாக இந்தத் தலையில் முண்டாக கட்டிய நொண்டி வீரப்பர்கள் மேற்கொண்ட சூழ்ச்சியும் சுற்றில் அம்பலமாக்கப்பட்டது.

இந்தத் துரோகியைத் தலைவராகக்கொண்ட அவ்வூர் கூட்டுறவுத் தொழிலாளர்

(9-ம் பக்கம் பார்க்க)

## மோகனம்-முகாரி!

—சத்தியசிலன்—

மோகன ராகம் ஆக
முதலிலே அவளைக் கண்டு,
தாகமோ டாவல் எல்லாம்
தமிழிலே சுருட்டித் தந்தான்!
பாகெனும் மொழியில் வாகீ
சுவரி பதிலுந் தந்தாள்!
தோகையாம் பண்ணோ டந்தத்
தோப்பிலோர் [1] சங்கம் கண்டான்!


காதலென் றுலகஞ் சொல்லுங்
கடுஞ்சுரம், கண்டோர், "இங்குச்
சாதல் வந்துற்ற போதும்
சரிகம, தெரிவோம்" என்று
தாதுகு சோலை, தோறும்
தளிர்மர நிழல்கள் தோறும்
மேதகு சபைகள் கண்டு
மெல்லிசை தந்தார் அம்மா!

இவ்வண்ணந் தனது தோப்பில்
[2] இசை வளர் வண்ணங் கண்டார்,
மைவண்ணங் கொண்டு வெள்ளை
மயிர் வண்ணம் மறைக்கும் மாமா!
உய்வண்ணம் அறியாதான் முன்
ஓடிவந் துடா!ரு பாடி,
கைவண்ணத் துடனே தன்நற்
கால் வண்ணங் காட்டினரால்!

"சாகடா" என்றே அந்தச்
[3] சங்கராபரணம் சீற,
வேகமாய்—[4] காலம் நான்கில்
விழுந்தடித் தோடி என்னும்?
பாகமாய் இருந்தாள் இல்லை,
பயிலுநல் இசையும் இல்லை
மோகனம் கேட்கச் சென்றோன்
முடிவிலே முகாரி கேட்டான்!

1 சங்கம்—சந்திப்பு, 2 இசை—காதல்
3 சங்கராபரணம்—பாம்பு
4 காலம் நான்கு—நாலாம் காலம்


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்பரேசன்,
14, டாம் வீதி, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை மறுத்தவரே உதவ வருவதேன்?

## சுயநலத்தால் சுரண்டுவோரின் சூழ்ச்சிகள் அம்பலம்

### மலையகத்தான் விழித்து விட்டான் மயக்கம் இனிக் கிடையாது

—தமிழ்மணி, மஸ்கெலியா—




தொழிற்சங்கம் என்ற ரீதியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அன்று செய்த தொண்டுக்கு மலைநாட்டார் என்றும் கடமைப்பட்டவர்கள். ஆனல் அவர்களின் அரசியல் உரிமை பறிக்கப்பட்டதே, மொழியுரிமைக்கு மோசம் வந்ததே, நாடற்றவர் என்ற நயவஞ்சக சொல்லுக்கு அடிமையானுர்களே அத் தருணத்தில்தான் இ. தொ. கா. வின் திறமை குன்றிவிட்டது. இல்லையென்ருல், அன்று அவர்கள் உறுதியுடன் போராடியிருந்தால் உரிமை இழந்தவர்கள் என்ற ஒரு கூட்டம் இன்று இலங்கையில் இருக்காது.

அது மட்டுமின்றி இருபெரும் தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட பதவி மோகம் இன்று தொழிலாளரின் ஒற்றுமையை ஒடுக்கி, அதுவும் குறிப்பாக தமிழ்த்தொழிலாளரிடையே ஒரு பயங்கர நிலையை ஏற்படுத்திவிட்டது.

ஒரே மேடையிலிருந்து பேசியவர்களும், பேசவேண்டியவர்களும் இன்று ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுகின்றனர். இதன் விளைவு தொழிலாளரிடையே கைகலப்பு, சாமிகும்பிடும்போது சண்டை, தோட்ட நிர்வாகிகளுக்கு தலையிடி.

#### ஆளுக்கொரு தொழிற் சங்கம்

இத் தருணத்தைப் பயன்படுத்தித்தான் ஆளுக்கொரு தொழிற் சங்கம் அமைத்து விட்டனர், சில சந்தர்ப்பவாதிகள்.

வாக்குரிமையைப் பறித்த ஐக்கிய தேசிய கட்சி வாக்குரிமையை வாங்கித் தரவும் மொழியுரிமையைப் பறித்த லங்கா சுதந்திரக் கட்சி மொழியுரிமையை பெற்றுத் தரவும் இன்று மலைநாட்டுத் தமிழரிடம் தொழிற்சங்கம் என்ற ரீதியில் சொந்தம் பாராட்ட வருகின்றன.

ஆனல் இவற்றை எல்லாம் ஏற்றுக்கொள்ள இன்று மலைநாட்டுத் தமிழருக்கு ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்ச்சி தடை விதிக்கிறது. தாங்கள் வேலை நிறுத்தம் செய்வது எதற்ககா என்று தங்களுக்கு தெரியாமலிருந்தவர்கள், இன்று தாங்கள் இழந்த உரிமைகளை எவ்வாறு எவர் மூலம் மீட்டுக் கொள்ள முடியும் என்பதைச் சிந்தித்துப் புரிந்து கொண்டனர்.

தமிழரசுக் கட்சி மலைநாட்டில் கிளைகள் அமைக்க வேண்டும் என்ற மன்னர் மாநாட்டின் முடிவு, எதிர்பார்த்தது போல பல தலைவர்களுக்கு மண்டையிடியைக் கொடுத்தது. உரிமைப் போருக்கு படை திரட்டுவது போல இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை ஒன்றுசேர்க்க முயற்சிக்கின்றனரே என்று நடுங்கியது அரசாங்கம்.

தங்களின் சுயநல வாழ்வுக்கும், செல்வாக்குக்கும் மோசம் வரப் போகிறதே என்று பதறினர் இன்னும் ஒரு சாரார். இவைகளெல்லாம் அவர்களின் உள்ளங்களில் எழுந்த பிரச்சினைகள். அவர்களின் உதடுகளோ "தமிழரசுக் கட்சியின் கிளைகள் மலைநாட்டில் வகுப்புவாதத்தை உண்டு பண்ணும்", "தமிழரசுக் கட்சியின் கிளைகள் மலைநாட்டுத் தமிழரின் ஒற்றுமைக்கு திங்கு விளைவிக்கும்" என்று எல்லாம் பல்லவி பாடின.

அதிர்ஷ்டவசமாக இப்பல்லவிகள் எல்லாம் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கை மலைநாட்டில் மேலும் மேலும் பலப்படுத்தி, தமிழரசுத்தலைவர்களுக்கு உற்சாகமளித்து விட்டன.

#### எது வகுப்புவாதம்?

வகுப்புவாதத்தை வளர்க்கும் என்று குற்றம் சாட்டும் சில தமிழ்த் தலைவர்கள் வகுப்புவாதத்தால் பறிக்கப்பட்ட வாக்குரிமையை மறந்து விடுகின்றனர். ஒற்றுமையை ஒடுக்கும் என்பவர்கள் அதே ஒற்றுமை, என்று, யாரால் ஒடுக்கப்பட்டது என்பதை உணர மறுக்கின்றனர். மேலும் தமிழரசுக் கட்சியின் கிளைகளை எதிர்ப்பதில் மட்டுமே இவர்களின் ஒற்றுமை தலைவிரித்து ஆடுகிறது.

"நாங்கள் இன்றுவரை நடத்திய போராட்டங்களிலெல்லாம் சிங்களத் தொழிலாளரும் கலந்து கொண்டனர். ஆனல் தமிழரசுக்கட்சி அந்நிலைக்குப் பங்கம் விளைவிக்க முயல்கிறது", என்று சிலர் கண்மூடித்தனமாகப் பேசுகின்றனர்.

தமிழ் மொழிக்குச் சமஉரிமையைக் கொடுத்தால் வருங்கால சமுதாயம் எங்களைத் தூற்றும் என்று சிங்களத்தலைவர்கள் கூறும்போது, தமிழர்களுடன் சேர்ந்து தமிழ் மொழிக்காகவும், வாக்குரிமைக்காகவும் போராட சிங்களத் தொழிலாளர்கள் மடையர்கள் அல்ல என்பதை இத் தலைவர்கள் உணர வேண்டும்.

#### 1961-ல் நடந்தது என்ன?

1961ம் ஆண்டு ஏப்ரல் 5ம் தேதி மலைநாட்டுத் தமிழரின் அடையாள வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய சிங்களவர்களின் தொகையை எண்ணுவதற்கு ஒரு கை விரல்கள் போதுமே. வேலைசெய்யாமல் இருந்தவர்கள்கூட அன்று விசேஷமாக வேலைக்குச் சென்றனரே!

தமிழர்களுக்கு மனிதாபிமானத்துடன் உரிமை கொடுக்க வேண்டியவர்கள் தான் சிங்களவர்களேயன்றி அதற்காகப் போராடவேண்டியவர்கள் அவர்கள் அல்ல என்ற உண்மையை இவர்கள் உணரவேண்டும்.

தமிழரசுக்கட்சியின் தொழிற்சங்கத்தின் நோக்கம் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளருக்கு வேலை வாங்கிக் கொடுப்பதும், தொழிலாளருக்கும் நிர்வாகிகளுக்கும் ஏற்படும் சிற்சில தகராறுகளைத் தீர்த்து வைப்பதும் மட்டுமல்ல. வாக்குரிமை, மொழியுரிமை ஆகியவற்றை இழந்த அடிமைகள் என்ற நிலையில் இருந்து நாடற்றவர், கள்ளத்தோணி என்று அழைக்கப்படும் லட்சம் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவும், அவர்களின் தொழில் உரிமைக்கும் அவர்கள் குழந்தைகளின் [illegible] மொழிக் கல்வியுரிமைக்கும் இன்று நெருங்கிக்கொண்டிருக்கும் ஆபத்து வராமல் தடுப்பதற்குமே என்ற உண்மையை மலைநாட்டுத்தமிழ்த் தொழிலாளர்கள் இன்று நன்கு உணர வேண்டும். சத்தியாக்கிரகத்தின்போது தமிழரசுக் கட்சி மலைநாட்டுத் தமிழர்களை மறந்துவிட்டது என்று குற்றம் சாட்டுவது உண்மைக்குப் புறம்பானது.

#### ஏன்? எதற்காக?

1961 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ம் திகதி இவ்வுலகில் வ[illegible]ழும் தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேரின் அநுதாபத்தையும் பெற்று சத்தியாக்கிரகம் நடந்து கொண்டிருக்கும்போது, தமிழரசுக் கட்சியை ஆதரிக்கும் தமிழர்களாகிய நாங்கள் இங்குமிருக்கிறோம் என்று அரசாங்கத்திற்கு காட்ட அன்று மலைநாட்டுத் தமிழர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்தினரே, அது எதற்காக?


அது மட்டுமின்றி மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்கள் அரிசியையும் மாவையும் வீட்டில் சேமித்து வைத்தனரே. அது எதற்காக? இதனைச் சிந்தித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

இன்று சீனரை விரட்ட பாரத நாடு வீறுகொண்டு எழுந்திருப்பதை போல அன்று மலைநாட்டுத் தமிழர்கள், மறுக்கப்பட்ட உரிமைகளை மன உறுதியுடன் போராடி மீட்டுக்கொள்ள சத்தியாகிரகத்தின் போது பொங்கி எழுந்தனரே!

ஆனல் நடந்தது என்ன? கேவலம் அரசாங்கத்தின் அற்ப அதட்டலுக்கு அஞ்சிய ஒரு சிலரின் சுயநலம் ஒரு சமுதாயத்தின் அறப் போரையே சீர்குலைத்துவிட்டது. இதை எல்லாம் உணராமல் தமிழரசுக் கட்சியினர் தங்களின் மொழியுரிமைப் போரில் தோல்வியடைந்து விட்டனர் என்று சுலபமாகக் கூறிவிடுகிருர்கள், மலைநாட்டில் இன்று திண்டாடும் சில தீரர்கள்.

அதே மொழியுரிமைப் போர்தான் தமிழரசுக் கட்

(9-ம் பக்கம் பார்க்க)

திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கை வாய்ந்த பம்ப்.

**விங்கெட்**

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் உலகப் பிரசித்தி பெற்ற மெஸ்ஸெர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான உறுதி வாய்ந்த தண்ணீர் பம்ப்கள் அதிக காலம் மிகத் திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு. மிகப் போட்டா போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்ரோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை. எம்மிடம் அவற்றில் பலரக உப உறுப்புகள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கைஉருளைகளும் கிடைக்கும்.

1½" மொடல்-மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.
2" மொடல்-மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.
3" மொடல்-மணித்தியாலம் 4800-16809 கலன் இறைக்கிறது.
டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை.
ஆகக் கூடிய ஏற்றும் உயரம் 70 அடி
ஆகக் கூடிய உறிஞ்சும் ஆழம் 25 அடி

விற்பனையாளர்கள்

சண்முகம் ஸ்டோர்ஸ்,
222, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஏ. எஸ். அரசரத்தினம் அன் கோ.
11, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

எம். எஸ். நாகலிங்கம்,
பிரதான வீதி, பருத்தித்துறை.

ஜி. எச். ஏ. டி. சில்வா அன் கோ.
வவுனியா.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

[illegible] கொமேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்,
([illegible] இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
தபாற் பெட்டி இல: 33. கொழும்பு.
காட்சி அறை: ஜெனரல் லேக்ஸ் ரோட். போன்: 79351.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாழ்வுக்கும் அழிவுக்கும் இடையே நிற்கிறது தமிழ் பேசும் இனம்

## சொல்லிலும் செயலிலே வேண்டியுள்ளது

### தமிழரசு வாலிப முன்னணி மாநாட்டில் யாழ் நகர முதல்வர் வரவேற்புரை

தமிழ் பேசும் இனம் என்றுமில்லாத அளவு துன்பமும் இம்சையும் அடையப்பெற்று இன வாழ்வுக்கும் இன அழிவுக்கும் இடையே நின்று தத்தளிக்கும் பயங்கரமான நேரத்தே—இன விடுதலை இயக்கத்தில் அச்சாணியாக விளங்கி, கடந்த காலத்தே பல அரிய சாதனைகளை அகிம்சையின் அடிப்படையில் நின்று சாதித்த இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் 9வது தேசிய மாநாடு இன்று இம் மண்டபத்தே கூடுகின்றது. தமிழரசு வாலிப முன்னணியின் தேசிய மாநாட்டினை அடுத்து முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறும் வரலாற்றினையொட்டி எதிரே வரும் சித்திரைத் திங்களில் நிகழவிருக்கும் அறப்போர்த் தொடர்ச்சி இம்மகாநாட்டின் உன்னத குறிக்கோளாகத் திகழ்கிறது. இவ்வித முக்கியத்துவம் வாய்ந்த மாநில மாநாட்டிற்காக ஈழத்தின் பல பாகங்களிலுமிருந்து வந்து இங்கு கூடியிருக்கும் உங்கள் அனைவரையும் தமிழரசு வாலிப முன்னணியின் சார்பில் வரவேற்று, உங்கள் ஆர்வம் வளர்க வளர்க என்று வாழ்த்துகின்றேன்.

2—2—63ல் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் ஆரம்பமான தமிழரசு வாலிப முன்னணியின் 9வது தேசிய மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய யாழ் நகர முதல்வர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் :—

உங்கள் இன விடுதலை இயக்கம் பூரண வெற்றியடைக என வணங்குகிறேன், விடுதலை வேட்கையால் வாழ்வினைத் தியாகம் செய்து அறங்கூறும் தமிழன்னையின் அரியணை காண அலையலையாகத் திரண்டிருக்கும் அறப்போர்க் கூட்டமே! ஈழமணித் திருநாட்டில் தமிழரசோச்சலாகாதென்ற குறுகிய மனோபாவத்தால் சுதந்திரங் கிடைத்த பதினைந்து ஆண்டுகளுள் ஆறு பிரதமர்களை இச்சிறு நாடு காணவைத்த நும்பெருமை—உலகில் எந்தச்சுதந்திர நாடும் ஈட்ட முடியாதவோர் பெருஞ்சாதனையை ஆக்கிய உங்கள் திண்மை வாழட்டும்!

தமிழ் பேசும் இனத்தைச் சிங்கள மக்களின் வளமான வாழ்வுக்கு வேள்வி செய்ய முனையும் ஆட்சியாளர் அமைதியான ஆட்சியை இச்சிறு நாட்டில் நிலைநிறுத்த முடியாது. ஆயுத பலத்தின் நிழலிலே, அவசரகாலப் போர்வையுள், அல்லற்பட்டு ஆற்ருது அவதியுற்று விழிகளை வெளியே வீசி விம்மும் பரிதாப நிலையை வளரவைத்த உங்கள் சக்தி வளரட்டும். உங்கள் அறப்போர் வெற்றியை நிலைநிறுத்தட்டும்.

#### உலக வரலாறு காட்டும் பாடம்

செந்தண்மையும் செங்கோன் மரபும் வாய்ந்த சிறப்பு மிகு பெருங்குடி மரபினரே! தாய் மொழியாகிய தமிழினைப் பேசும் எமக்கு இன்று ஏற்பட்டிருக்கும் துன்பியல் நிலையைக் கண்டு அஞ்சாது, தளராது, அறத்தில் வழுவாது, ஆண்மையுடன் தலை நிமிர்ந்து அகிம்சைப் போர் சங்கநாதஞ் செய்யும் படை வீரர்களே! உங்களின்போர் நிலைகுறித்து உலக வரலாற்று ஏடுகள் தரும் உண்மைகள் சிலவற்றை உணரத் தருகிறேன்.

16ம் நூற்றாண்டில் எட்டாவது ஹென்றி ஐரிஷ் மொழியையும், வேல்ஸ் மொழியையும் அழிக்க எண்ணிச் சட்டங்கள் இயற்றினன் அந்நாட்டு மக்கள் 400 ஆண்டுகளாகப் போராடி இந்த 20ம் நூற்றாண்டில் வெற்றி கண்டார்கள். பெல்ஜிய நாட்டில் 'விளமிஷ்' மொழியாளர் நூறு ஆண்டு

(13-ம் பக்கம் பார்க்க)

தமிழ்-முஸ்லிம் மொழியுறவு

# காலத்தைக் கடந்து நிற்பது

## மதத்தைக் காட்டி இனத்தைப் பிரிப்பது அறியாமை

இரு பெரும் தேசிய இனங்கள் வாழும் இந்நாட்டில் சிங்களம் மட்டும் என்னும் சட்டத்துணை கொண்ட காட்டாட்சியின் கொடுமையால் நாம் காணும் வகுப்புவாத அமைப்புக்கள்-விருப்பு வெறுப்புக்கள்-அது தோன்றி வளர்ந்த சூழ்நிலைகள்-அதிலிருந்து விடுதலை பெறத் தமிழரசு தரும் திருப்தியான நம்பிக்கைகள் போன்ற இன்ன பிற அமைப்புக்களையும் நாம் கருத்தூன்றிக் கவனிக்கின்ற அதே நேரத்தில், நமது ஒன்றுபட்ட தேசிய இன உணர்வை மத அடிப்படையில் பங்கிடுவது எவ்வளவு பெரிய இன வஞ்சிப்பு என்பதைப் பல முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஏனோ உணர்வதில்லை. ஒவ்வொரு மொழி பேசுகின்ற மக்களும் மத வேறுபாடற்ற தமக்குரிய உயரிய தனிப்பெரும் பண்புகளையும்-வாழ்க்கை அமைப்புக்களையும் சரியாகத் தெரிந்து நமது இனம் எது என்று உணர்த்துகின்றது. பண்டைய காலத் தமிழ் மக்கள் பரந்த அறிவும், தூய உள்ளமும் கொண்டவர்களாக் விரிந்து பரந்த மனப்பான்மையுடன் வாழ்ந்து வந்தார்கள். அங்கே தமிழ் மேம்பட்டதோடு தமிழகத்து இஸ்லாத்தையும் அது தொடர்ந்து வளர்த்து வருகின்றது.

உலகில் இதுவரை இருபத்தியொன்றுக்கு மேற்பட்ட நாகரிகங்கள் தோன்றி மறைந்தாலும், தமிழ் அன்று முதல் இன்று வரை ஒரே நிலையில்தான் மலர்ந்து அம்மக்களின் வாழ்வுக்கு மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றது என்று "தாயின்பி" (Toynbee) என்ற வரலாற்றுப் பேராசிரியர் கூறுகின்றார்.

இலங்கையின் இன்றைய இதயமற்ற இன வெறி ஆட்சியும்-அதைத் தொடர்ந்து ஓர் பெரும் தேசிய இனத்தின் இன கௌரவம் சட்டத்தைக் காட்டிச் சூறையாடப்படுவதும் சர்வ சாதாரணமான ஓர் நிகழ்ச்சியாக இலங்கை அரசியல் உருவாக்கிக்கொண்டது. சிங்கள அரசின் சிங்களம் மட்டும் கொள்கையும், பௌத்த மதமே அரச மதம் என்ற பயங்கரமான எண்ணமும் எழுந்துள்ள இந்நிலையில், தேனைச் சுற்றும் ஈக்களைப் போன்று பதவிப் பிச்சைக்கென்றே தம்மை அர்ப்பணித்துவிட்ட சில முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தம்மை வாழவைத்துப் புகழூட்டித் தந்த தம் தாய் மொழியை மறந்து-இன உணர்வை வெறுத்து-தன்மானம் தரும் முஸ்லிம் அரசை மறுத்துத் தமிழ் வேறு, தமிழகத்து இஸ்லாம் வேறு, தமிழினம் வேறு என்று வரலாறு தெரியாது பிரித்துக் காட்டிப் பிதற்றிப் புலம்புகின்றார்கள். தமிழ் தந்த பல இனங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஒன்றாக இணைந்து பிணைந்துவிட்டன—மொழி வழியில் அவர்கள் ஓர் தேசிய இனம் என்ற நிலை சர்ச்சைக்கிடமின்றி என்றோ சரித்திர ஆசான்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதாகிவிட்டது. அரசியலையும் மதத்தையும் தமக்குச் சாதகமாக ஒன்றுபடுத்தி எங்கோ இருக்கின்ற அராபிய தேசிய இன உணர்ச்சியுடன் தம்மை ஒப்பிட்டுக் கொள்ளும் இலங்கை முஸ்லிம்கள் மத ஒற்றுமையைத் தவிர்த்து வேறு எந்த உறவும்-உரிமையும் இருப்பதாக நினைக்கின்றார்கள்? உலகத்தின் பல பாகங்களிலும் பரந்து விரிந்து வாழும் இஸ்லாமிய மக்களுக்குள் மத ஒற்றுமையைத் தவிர, மொழி-பண்பாடு, நாகரிகம் போன்ற எந்த ஒற்றுமைகளுமே ஒன்றுடன் ஒன்று சேர்ந்ததில்லை-சேரவும் முடியாது.

**கே. எஸ் ஏ. கபூர்**

#### இஸ்லாம் மத அடிப்படையில் ஒன்றுபடுத்தியது

தமிழகத்து முஸ்லிம்கள் தமிழரோடும் - தமிழுடனும் இன்று நேற்று ஒன்றெனக் கலந்து ஓர் சரித்திரத்தை உருவாக்கியவர்களல்ல. சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்பு தொட்டே தமிழர்-முஸ்லிம் வாழ்வும் அரசியலும் ஒரே உணர்ச்சிகொண்டதாக ஒன்றுபட்ட உணர்வைத் தாங்கிவிட்டது. அகில உலகில் இஸ்லாம் பல்வேறு நிலைகளையும் கொண்ட மக்களை மத அடிப்படையில் இணைத்த சக்தியே தவிர, மொழி, பண்பாடு, கலை, கலாச்சாரம் போன்ற இன்ன பிற பிரதேச பழக்க வழக்கங்களை ஒன்றாக இணைத்துவிட்ட ஓர் சக்தியென யாருமே விவாதிக்க முடியாது. அதனால் தான் சரித்திர மேதைகள் தமிழகத்து இஸ்லாமிய அரசியல் நெறியை முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் காண்பிக்கின்றார்கள். மதப் பிரிவில் முதல் இரண்டு எண்களும் அராபியத் தேசியத் திற்கும்-பாரசீக இன மலர்ச்சிக்கும் உரியவைகளாகும். அவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாணிகம் போன்ற பல துறைகளில் தமிழகத்துடன் தமக்கென ஓர் தனித் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டவைகள். அதனால் ஒன்றுக்கொன்று தம் மொழிகளை விருத்தி செய்துகொள்ளவும் தம் பண்பாடு, நாகரிகங்களைப் பரப்பிக்கொள்ளவும் முடிந்தது.

அதே போல் மூன்றும் பிரிவு துருக்கிய இன எழுச்சியைக் கொண்டதாகும். இந்நிலை ஏழாம நூற்றாண்டு என்றே கூறலாம். அப்போது இதே நூற்றாண்டில்தான் தமிழகமும் இஸ்லாமும் ஒன்றுக்கொன்று நேரடியான பல்வேறு தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டன. எம் பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமிய நெறியை வகுத்த பின்பே அராபியர் என்ற நிலை-இஸ்லாமியர் என்ற நிலைக்கு மாறினாலும், மொழி பண்பாடு போன்ற இன்ன பிற அன்றும் இன்றும் ஒரே நிலையில்தான் இருந்து வருகின்றன. என்றாலும் அன்றைய அராபியர்களின் காட்டுமிராண்டித் தனமான நிலையும்-நினைப்பும் நபி பெருமானார் அவர்களால் மாற்றப்பட்ட சக்திக்கு இக்கருத்து மாறுபட்டதல்ல.

#### தமிழுக்காகப் போராடிய முஸ்லிம்கள்

அன்று விஜய நகர சாம்ராஜ்யம் எழுப்பிய தென்னகத்துத் தேசிய உணர்வு தமிழகத்து முஸ்லிம்களையும் அவர்களின் மத நெறிகளையும் பேணிப் பாதுகாக்கப் பல வழிகளிலும் உதவியது. அதே நேரத்தில் அத் தேசியம் வட நாட்டிலிருந்து தமிழ் நாட்டை நோக்கி அடிக்கடி படை எடுத்துச் சூறையாடிவந்த வட திசை இஸ்லாமியப் பேரரசை எதிர்த்துப் போர்க்களம் பல கண்டிருக்கின்றது. அப்போதெல்லாம் தமிழகத்து முஸ்லிம்கள் தம் தாயகம் எனக் கொண்டு தமிழகத்தைக் காக்க விஜய நகரப் படையின் முன்னணியில் நின்று தம் மொழியான தமிழுக்காக—தம் கலை—பண்பாடு, நாகரிகம் போன்றவைகளுக்காகப் போராடத்தயங்கவே இல்லை.

வட இந்தியாவை அடித்துப்பிடித்து டில்லியில் தன் பேரரசை நிறுவிக் கொண்ட அலாவுதின் கில்ஜியின் பெரும் படை மாலிக்கபூர் தலைமையில் பாண்டியநாட்டின் மீதுபடை எடுத்த நேரத்தில் பாண்டிய மன்னனிடம் 50,000 முஸ்லிம் படைவீரர்கள் இருந்தார்கள். இதை அறிந்த மாலிக்கபூர் தூதனுப்பி-முஸ்லிம் என்ற உரிமை பாராட்டி தன் காட்டுமிராண்டித் தனமான படை எடுப்பிற்கு ஆதரவாகப் பாண்டிய படையில் நின்றும் ஒதுங்கிக்கொள்ளுமாறு கேட்டான். அப்போது இச் சொல் தன் காதில் பட்டதும் பாண்டியநாட்டு முஸ்லிம் தளபதி தணலில் மிதித்தவன்போல் துடித்தெழுந்தான். மறுநாள் பாண்டிய

(11-ம் பக்கம் பார்க்க)



பணக்காரன் முதல்

பாட்டாளி வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்
தந்தி தாமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.
டெலிபோன் 3597—6522
Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இரத்த வெள்ளம் அளித்த ஐரிஷ் விடுதலை

## உங்கள் சிந்தனைக்கு

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் கடந்த 14 ஆண்டுகளாகத் தங்களது உரிமைகள் அனைத்தையும் இழந்து, அரசியல் அனாதைகளாக, நாடற்ற இனமாக, அல்லலுற்று அழியும் நிலையில் இருப்பதை அனைவரும் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி 1949ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இக் கட்சி 1956ம் ஆண்டு ஆனி மாதம் தொடக்கம் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பல விதமான போராட்டங்களையும் நடாத்தி, இன்னல்களையும் ஏற்று வருகிறது. இதனால் சிங்கள ஆட்சியாளர் தமிழ் பேசும் மக்கள் மீது அடக்குமுறைகளைக் கையாண்டனர்—கையாண்டு வருகின்றனர்.

சில சுயநலக் கும்பல்கள், விரக்தியினாலும் தமிழரசுக் கட்சியினர் மீது அபாண்டத்தைச் சுமத்த விரும்புவதினாலும் தமிழ்பேசும் மக்களிடையே தவறான கருத்துக்களைப் பரப்ப முற்படுவதோடல்லாமல், உரிமைப் போராட்டங்களையும் பலவீனப்படுத்த முற்படுகிறார்கள். ஓர் இனத்தின் விடுதலை என்பது கடையில் வாங்கும் பொருளல்ல என்பதை அவர்கள் உணர வேண்டும். பல நூறு ஆண்டுகள் போராடி, தியாக வேள்வியில் உயிர்ப்பலி கொடுத்துப் பெறும் புனிதமான பொருள்தான் விடுதலை என்பதை உலகத்தின் கடந்த கால வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுகிறது.


விடுதலைக்காக நீண்ட காலம் போராடி, எத்தனையோ லட்சம் மக்களையும் பறிகொடுத்து, இன்று, சுதந்திரக் குடியரசாகத் திகழும் அயர்நாட்டின் சரித்திரம் இதற்குச் சான்று பகரும். ஆகையினால்தான் அயர் நாட்டின் வரலாற்றை, ஆண்ட இனமான தமிழ் பேசும் இனத்திற்கு எடுத்துக் கூற முற்பட்டோம்.

### பொதுவியல்

இங்கிலாந்திற்கு மேற்கே 57 கல் தூரத்தில் உள்ள தீவு அயர்நாடு. ஆங்கிலத்தில் இத்தீவுக்கு அயர்லாந்து என்று பெயர். இத்தீவு, 26,602 சதுரக் கல் பரப்பளவு உள்ள

### 'கோமகன்'
### 'மாமல்லன்'

சுதந்திர அயர் குடியரசையும், ஆங்கில ஆட்சியின் கீழ் இயங்கும் 5,238 சதுரக் கல் பரப்பளவுள்ள வட அயர் நாட்டையும் தன்னகத்துள் அடக்கியது.




இங்கிலாந்தின் மேறகுப் பகுதியில் உள்ள அயர்லாந்தின் தேசப் படம்.

அயர் குடியரசின் மக்கள் தொகை 29,58,878. இதன் தலைநகர் டப்ளின். இந் நாட்டு மக்கள் கைலிக்இனத்தவர்கள். இவர்கள் பேசும் மொழி அயர் மொழி. இவர்களுள் 94% ஆனோர் கத்தோலிக்கர்கள். ஏனையோர் புரட்டஸ்தாந்து மதத்தவர்கள்.

வட அயர் நாட்டின் 13,70,709 மக்களுள் பெரும்பான்மையோரும் கைலிக் இனத்தவர்களே. ஆனால் ஆங்கில ஆட்சியின் குடியேற்றத் திட்டங்களினாலும் மதமாற்றத்தினாலும் கத்தோலிக்கர் அந்நாட்டில் சிறுபான்மையினராயினர். அதன் தலைநகர் பெல்பஸ்ற்.

### சரித்திரம்

#### அரங்கம் 1

பண்டைக்காலந் தொட்டு அயர்நாடு ஐந்து சிற்றரசர்களாலும் ஓர் அரசனாலும் ஆளப்பட்டு வந்தது. கி.பி. 795 ம் ஆண்டு தொடக்கம் நோவே தேசத்தினர் அயர் நாட்டின்மீது படையெடுக்க ஆரம்பித்தனர்; ஒரு சில பட்டினங்களை வென்று ஆட்சியும் செலுத்தினர். ஆனால், 1014 ல் நோவே ஆக்கிரமிப்பாளர் அடியோடு அயர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு, ஆட்சி அந்நாட்டு மன்னர்களின் ஆதிக்கத்துள் வந்தது.

இவ்வெற்றியைத் தொடர்ந்து, ஒரு சிற்றரசனை, அரசன் பதவி நீக்கம் செய்தான். அச்சிற்றரசன் இங்கிலாந்து சென்று ஆங்கிலேயரின் உதவியுடன் அயர்நாட்டின் மீது படையெடுத்து வந்தபோது அயர்நாட்டு மக்களால் துரத்தியடிக்கப்பட்டான். அச் சிற்றரசன், மீண்டும் 1170 ல் பிரமாண்டமான ஆங்கிலப் பட்டாளத்துடன் வந்து அயர்நாட்டை வெற்றிபெற்று, ஆங்கிலேயரின் அனுசரணையுடன் ஆட்சி நடாத்தினான்.

1185 ம் ஆண்டில் ஆங்கில இளவரசனான ஜோன் அயர் நாட்டை ஆள்வதற்காக இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டான். இவன் ஆண்டு கொண்டு வரும் பொழுது இவனுடைய தந்தையான மன்னர் ஹென்றி மரணமடைந்தார். ஆகவே ஜோன் இங்கிலாந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் இங்கிலாந்திலிருந்து அயர் நாட்டை ஆளுவதற்கு வசதியாக டப்ளினில் ஜோன் மன்னர் டப்ளின் மாளிகையை நிர்மாணித்தான். அன்று தொட்டு டப்ளின் மாளிகை அயர்நாட்டு ஆட்சியின் தலைமை நிலையமாகவிளங்கியது.

பதினாறும் நூற்றாண்டில் இங்கிலாந்து புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவியது. ஆனால் அயர்நாடு கத்தோலிக்க நாடாகவே இருந்து வந்தது. ஆங்கில அரசியான எலிசபெத் புரட்டஸ்தாந்து மதத்தை அயர் மக்கள் மீது திணிக்க முற்பட்ட பொழுது அயர் தலைவர்கள் ஸ்பானியாவின் உதவியுடன் எதிர்த்தார்கள்; 1598ல் ஓரளவு வெற்றியும் கண்டார்கள். ஆனால் 1601ல் திரும்பவும் ஆங்கிலேயருக்கு அயர்நாட்டினர் அடிமையானார்கள்.

(வளரும்)

# தி.மு.க.வை சிதைக்கத் திட்டம்?

## காங்கிரசாரின் புதிய சட்டம்

தென்னகத்தில் தோன்றியுள்ள திராவிட முன்னேற்றத்தின் வளர்ச்சி கண்டு காங்கிரஸ் மேலிடம் கதி கலங்குகிறது. அந்த அதிர்ச்சியினாலேயே தி. மு. க. வைத் தடை செய்துவிட 'பிரிவினைத் தடைச் சட்டம்' என்னும் போர்வையில், அவசரகாலச் சூழலில் ஒரு சட்டத்தைக் கொண்டு வருகின்றது காங்கிரஸ் ஆட்சி. இத் திட்டத்தைச் சாடுகிறார் கட்டுரையாளர்.

தமிழகத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றதோடல்லாமல், ஜனநாயகத் தன்மையில் சிறிதளவேனும் சிதறாமல் இயங்கிவருவது திராவிட முன்னேற்றக் கழகம். சிறந்ததும், சிந்தனையைத் தூண்டக் கூடியதுமான சொல், செயல் இரண்டிலுமே வீரர்களாகத் திகழும் எண்ணற்ற தம்பிமார் புடைசூழ அறிவெனும் ஆயுதம் ஏந்தி வரும் அறிஞர் அண்ணாவின் குரல் கேட்ட மாத்திரத்திலே தமிழ் நாடு முழுவதும் செயற்பட ஆரம்பிக்கும். இத்தகைய தொரு எதிர்க்கட்சியையிட்டு ஆளும் கட்சியான காங்கிரசுக்கு கிலி பிடித்துவிட்டது. தி. மு. கவை நசுக்கிவிட பிரிவினைத் தடைச் சட்டம் ஒன்றை இயற்றியிருக்கிறது.

சீனர்களின் ஆக்கிரமிப்பை அடுத்து நாட்டில் அவசர கால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டது. பொது நோக்குடனும், நாட்டின் பாதுகாப்பிற்குதவும் பொருட்டும் தி. மு. க. காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து பொது எதிரியை விரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதே வேளையில் பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வருவது கொடுமையானது என்று நாட்டு மக்கள் குமுறுகின்றனர்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ள எவரும் இந்தச் சட்டத்தை நிச்சயமாக ஆதரிக்கமாட்டார்கள்.

அரசி

கடந்த வருடம் ஜுலை மாதத்தில் அரசாங்கத்தின் விலை வாசி ஏற்றத்தைத் தடுக்குமுகமாக தி.மு.க. ஒரு பெரும் போராட்டத்தை தமிழகத்தில் நடத்தியது. தலைவர்களுட்பட பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள் சிறைசென்றனர். மக்கள் மத்தியிலே பன்மடங்கு அவர்களுடைய செல்வாக்கு உயர்ந்து விட்டது. கடந்த பொதுத் தேர்தலின்போது தென்னகத்தில் தி. மு. கவினர் பெற்ற வெற்றி ஏற்கனவே தி. மு. கவின் செல்வாக்கின் வளர்ச்சியை நாடறிய வைத்துவிட்டது.

விட்டு வைத்தால் ஆபத்தும் ஏற்படும். அடக்குமுறையால் அடித்தளத்தில் தள்ளிவிட வேண்டும் என்று காங்கிரஸ் மேலிடம் தீட்டிய திட்டங்கள் இன்று செயல்பட ஆரம்பித்துவிட்டன. உண்மையும், உறுதியும்; நேர்மையும், நீதியும் கொண்டு நாட்டு மக்களுக்கு நன்மை பல புரியும் தி. மு. க. வை முறியடித்துவிட இதுதான் அவர்களுக்கு வாய்த்த சந்தர்ப்பம், என்று தயாரித்திருக்கின்றனர். பிரிவினைத் தடை சட்டத்தை.

சீன ஆக்கிரமிப்பை ஆதரித்தும் அதற்கான ஐந்தாம் படை வேலைகளைச் செய்தும், அந்நியனுக்கு நமது நாட்டைக் காட்டிக் கொடுக்க முனைந்ததே கொம்யூனிஸ்டுக் கட்சி. அக் கட்சியைத் தடைசெய்ய முடியவில்லை. நாட்டுக்குத் தீமையினைத் தேடித்தர வந்த ஒருவனை வீழ்த்திவிட உதவிட நேசக்கரம் நீட்டிய தி. மு. க.வை ஒழித்துவிட நினைப்பது பேதமை.

பிரிவினைத் தடைச் சட்டத்தையிட்டு நாவலர் நெடுஞ்செழியன் அண்மையில் சென்னை லட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் பேசும்போது பல அரிய கருத்துக்களை வெளியிட்டார்:-

திராவிட முன்னேற்றக்கழகம் ஜனநாயக அடிப்படை உரிமைகளை மீறாமலே நடந்து வந்திருக்கிறது. கட்சியின் கருத்தை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக தீப் பந்தத்தை ஏந்திச் சென்று வன்முறையில் இறங்கியது கிடையாது. வன்முறை மூலம் கருத்தைப் புகுத்த முயன்றால் அதைத் தடுக்கப் பல சட்டங்கள் இருக்கின்றன.

"ஜனநாயக நாட்டில் அமைந்த உரிமைகளோடு கட்சியின் கருத்தை மக்களிடம்சொல்லும்போது அந்தக் கருத்தைக் கருத்தால் வெல்ல முடியாமல் போகுமோ என்ற அச்சம் ஏற்படும் காரணத்தால் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள்".


நெருக்கடி காரணமாகச் சில சனநாயக உரிமைகள் கட்டுப்படுத்த வேண்டியிருக்கும். ஆனால் நெருக்கடியைப் பயன்படுத்தி சனநாயகத்தையே கட்டுப்படுத்திவிடக் கூடாது.

பேறு காலத்தின்போது பெண்ணுக்கு ஏற்படும் நெருக்கடியான நிலைமையில் தாயையும் குழந்தையையும் சேர்த்து காப்பாற்ற வேண்டும். அதுபோல சனநாயகம் என்ற தாயையும் அவசர கால சட்டம் என்ற குழந்தையையும் காப்பாற்றியாக வேண்டும.

இரண்டில் ஏதாவது ஒன்று இருந்தால் போதும் என்ற நிலை வரக்கூடாது.

தடைச்சட்டம் கொண்டு வந்த நேரத்தில் இது அவசியமில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்கு சட்ட அமைச்சர் சென் எங்

(13-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1963 பெப்ரவரி மாதம் 10-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# இரு அரசியற் குற்றங்கள்

இரு அரசியற் குற்றங்கள்-பண்டாரநாயக்கா தம்பதிகளின் அரசாங்கங்களின் மீது இரு பெரும் அரசியற் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளார் தமிழரசுத் தந்தை.

தமிழ் பேசும் மக்களைக் கணவனின் ஆட்சியும் ஏமாற்றியது மனைவியின் ஆட்சியும் ஏமாற்றியது. இருவரின் செய்கையும் நய வஞ்சகம் நிறைந்த நம்பிக்கைத் துரோகமானது. அது வெறும் ஏமாற்றுவித்தையன்று. தமிழரசுக்கட்சியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை அன்று காலஞ்சென்ற பிரதமர் கிழித்தெறிந்தார், பொறுப்பற்ற முறையில். இது நம்பியவர்களைக் கழுத்தறுக்கும் நயவஞ்சகத் துரோகமாகும்.

ஓர் ஒப்பந்தத்தைக் கைவிடவோ, திருத்தவோ வேண்டுமானால், அதில் கைச்சாத்திட்டவர்களையும் கலந்துகொள்ள வேண்டாமா? இரு சாரார் கைச்சாத்திட்ட உடன்படிக்கையை ஒருவர் மட்டும் எதேச்சாதிகாரமாகக் கிழித்தெறிவதென்றால், அஃது ஏமாற்றும் நோக்கத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்தமேயன்றி வேறென்ன?

வகுப்புக் கலவரத்தின் விளைவாக தமிழ் பேசும் மக்களிடையே ஏற்பட்ட வெறுப்பும், மன வேதனையும் சுதந்திர ஈழத்தை தோன்ற வழிவகுத்துவிடுமோ என்ற பீதியும் திரு பண்டாரநாயக்கா ஒப்பந்தம் செய்ய முன் வந்ததற்கு ஒரு காரணமாகும். மக்களின் உணர்ச்சி தணிந்ததும் உடன்பாட்டை உதறித் தள்ளினர்.

சந்தர்ப்பம் கிட்டும்போது உடன்படிக்கையை மீறலாம் என்ற எண்ணத்துடனேயே அவர் அதில் கையெழுத்திட்டார் என்பது இதினின்று தெளிவாகிறதல்லவா?

காலஞ்சென்ற பிரதமர் செய்த நம்பிக்கைத் துரோகம் இலங்கை வரலாற்றிலே கண்டிராத ஒரு மாபெரும் துரோகமாகும்.

தமிழ் பேசும் மக்களை ஏமாற்றுவதில் தான் கணவருக்குச் சளைத்தவரல்ல என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார் திருமதி சிறிமாவோ.

கடந்த பொதுத் தேர்தலின்போது சிறிமாவோ குழுவினர் தமிழ் பேசும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எல்லாம் எங்கே? ஆட்சியைக் கைப் பற்றியதும் அவை காற்றில் பறந்து விட்டன. ஏற உதவிய ஏணியை எட்டி உதைத்து விட்டனர். அவர்களின் வாக்குறுதிகள் என்றும் செல்லாக் காசுகளே என்பதை நிரூபித்து விட்டனர்.

அரசாங்கம் செய்யும் ஒப்பந்தங்கள், அளிக்கும் வாக்குறுதிகள் கௌரவிக்கப்பட வேண்டும். அவை வெறும் பொழுது போக்குப் பேச்சாகக் கருதக்கூடாது. அதுவே ஜனநாயகப் பண்பு—ஜனநாயக ஆட்சியின் சிறப்பு. இத்தகைய ஜனநாயக ஆட்சிமுறைக்கும் பண்டாரநாயக்கா தம்பதிகளுக்கும் வெகு தூரம் போலும்.

நாட்டின் வரலாற்றினைக் கறைபடியச் செய்த இவ்விரு துரோகங்களும் மாபெரும் "அரசியல் குற்றங்கள்" என்று தமிழரசுத் தந்தை குற்றம் சாட்டியுள்ளார் வாலிபர் மாநாட்டிலே.

இவை சாதாரண குற்றங்களல்ல. நாட்டின் எதிர்காலத்தையே குட்டிச்சுவராக்கிய பாரதூரமான குற்றங்களாகும். தமிழரசுத் தந்தையின் இக் குற்றச்சாட்டுகளுக்கு சிறிமா அரசாங்கம் அளிக்கும் பதிலென்ன?

"நாடற்றவர்கள்" பிரச்சினைபற்றி பிரதமர் எதிர்க்கட்சித்தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர், முக்கிய பிரச்சினைகளைத் தேசிய அடிப்படையில் அணுகப் போவதாகவும் தெரிவித்தார்.

அதனையொட்டி தமிழரசுக் கட்சித் தலைவர்களையும் அழைத்து அவர் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது. இது எவ்வளவுதூரம் உண்மை என்பது தெரியவில்லை.

மொழிப் பிரச்சினைபற்றி பிரதமர் பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என்று நம்புவதற்கு இடமில்லை. ஏனெனில் அவர்களுக்கு அது தீர்ந்துபோன பிரச்சினையாம். இன்று அவர்கள் "சிங்களம் மட்டும்" சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

'நாடற்றவர்' பிரச்சினைபற்றிப்பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தலாம். அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத்திட்டமான, தெளிவான திட்டங்களும் யோசனைகளும் தமிழரசுக் கட்சியிடம் உண்டு. அவற்றை ஆட்சியாளர்களுக்குக் கொடுத்துதவுவதில் ஆட்சேபம் இருக்க முடியாது.

"நாடற்றவர்"களை "பிரஜைகளல்லாதோர்" என்ற நிலைக்கு மாற்றுவதற்காக அரசாங்கம் முயற்சி செய்வதானால் தமிழரசு யோசனைகள் அவர்கட்கு நிச்சயம் பயன்படப் போவதில்லை.

தற்போதைய பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி "நாடற்றவர்"களை இலங்கைப் பிரஜைகளாக்கவும் இடமில்லையாம்.

இந்நிலையில் "நாடற்றவர்" பிரச்சினையை தேசியப்பிரச்சினையாகக் கருதப்போகிறோம் என்று பறைசாற்றினாலும், ஆட்சியாளர் அதனை இறுதிவரை வகுப்புவாதக் கண்ணோட்டத்துடனேயே நோக்குவார்களென்பதில் ஐயமில்லை.

இதுபற்றி ஆட்சியாளர் அளிக்கும் வாக்குறுதிகளிலும் செய்யும் ஒப்பந்தங்களிலும் தமிழ் பேசும் மக்கள் இம்மியளவுகூட நம்பிக்கைகொள்ள இடமில்லை.

ஆகவே மொழிப் பிரச்சினை, பிரஜாவுரிமைப் பிரச்சினை முதலிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தமிழ் பேசும் மக்கள் முன்னுள் ஒரேயொரு பாதைதான் உண்டு. அதுதான் போராட்டப்பாதை!

# கறுப்புக் கொடிகளை களவாடினர் பொலிசார்

## யாழ்ப்பாணத்தில் துக்க தினம்

பெப்ரவரி 4ம் திகதி வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் துக்க தினம் அனுட்டித்த நாள், பொழுது புலரும் வேளை, யாழ்.நகரம் முழுவதும் நூற்றுக்கணக்கான கறுப்புக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. ஆனால் பொழுது புலர்ந்த இரண்டு மணி நேரத்துள் ஒரு சில கறுப்புக் கொடிகளைவிட மற்றக் கொடிகள் யாவும் மறைந்து விட்டன.

கொடிகள் மறையக் காரணம் வேறு யாருமல்ல, நாட்டைக் காக்கும் நகரின் காவலர்கள் அன்று நகரின் கள்வர்களாக மாறினர். நீல நிற பொலீஸ் டிரக் வண்டியில் ஏறிய பொலீஸ் "பகற்கொள்ளைக்காரர்கள்" சன நடமாட்டம் தொடங்கு முன் தங்கள் பகற்கொள்ளையை நடத்தினார்கள், தெருவில் கட்டப்பட்டுள்ள கொடிகளை அறுக்க அவர்களுக்கு உரிமை இருக்கலாம். தனிப்பட்டோரின் கடைகளுக்கு மேல் கட்டப்பட்டிருந்த கொடிகளை அகற்ற எதுவித உரித்தும் இடையாது.

இதில் ஒரு புதுமை என்னவெனில் இந்தப் பொலிஸார் பொலீஸ் உடையணியாது காக்கி காற்சட்டையும் வேறு நிற பனியனும் அணிந்திருந்தனர். உயரமான டிரக் வண்டியின் மேல் ஒருவன் நின்று கொக்கச்சத்தகத்தால் கொடிகளை அகற்றி வந்தான்.

கொள்ளைக்காரர்கள் பெரியகடை வீதியில் உள்ள ஒரு கடையை அடைந்து அக்கடையின் மேலுள்ள கறுப்புக்கொடியை அகற்ற முற்பட்டபோது அக்கடை முன் நின்றவர் ஒருவர் "கொடியை அகற்றுப் பார்க்கலாம்" என்று சவால்விடவே நகரின் கள்வர்கள் பேசாமல் அவ்விடம் விட்டகன்றனர். அக் கடையின் மேலுள்ள கொடி நாள் முழுவதும் கம்பீரமாகப் பறந்தது.

ஒருபுறம் பல பொலிசார் வாகனமேறி கறுப்புத் துணிக் கொள்ளை நடத்த மறு புறம் இரு பொலீஸ் காரர்கள் பொலீஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மாநகர சபை மண்டபத்திற்குச் சென்று, மண்டபத்திற்கு மேல் பறந்துகொண்டிருந்த கறுப்புக் கொடியை அகற்ற வேண்டுமென்று காவற்காரனிடம் கூறினர். காவற்காரன் சபை முதல்வரிடம் கூறவேண்டும் என்று கூறிவிட்டு அருகிலுள்ள வாடி வீடுசென்றார். தொலைபேசி மூலம் டாக்டர் தர்மலிங்கத்திடம் பேசிவிட்டு கொடியை அகற்ற முடியாது என்று கூறத் திரும்பி வந்த காவலாளி, பொலிசார் கறுப்புக்கொடியைக் களவாடி மறைந்துவிட்டதை அவதானித்தார்.

நகர மண்டபத்தின் மேல் பறந்த கொடி களவாடப்பட்ட செய்தி கேட்டவுடன் யாழ். நகர சபை முதல்வர் டாக்டர் தர்மலிங்கம் நகர மண்டபத்துக்கு விரைந்து வேறொரு கறுப்புக் கொடியை ஏற்றுவித்தார். சிறிது நேரத்தின் பின் நகர மண்டப மைதானத்திலும் ஒரு கறுப்புக்கொடி நாட்டப்பட்டது.

புதிதாக திறக்கப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் மேலும் கறுப்புக்கொடி பறந்தது. விடியற்காலை கொடியை [illegible] நிலையத்து அதிகாரிகளிடம் முறையிட்டதாகவும் அதன் பேரில் காவற்காரன் விசாரிக்கப்பட்டு பொலிசில் புகார் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

யாழ் பொது நூல் நிலையத்தின் மீது பறந்த கொடியினை அகற்ற சில பொலீசார் அவ்விடத்தில் கள்வர்கள் போல் உலாவினராம். ஆனால் வசதி ஏற்படாது போகவே, விட்டுச் சென்று விட்டனர்.

மணிக்கூண்டு கோபுரத்தில் பறந்த கறுப்புக் கொடியினை அகற்ற எல்லா வழிகளிலும் முயன்று பார்த்தார்கள். ஆனால் கொடி மிகவும் உயரத்தில் பறந்ததால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

### ஊர்காவற்றுறை

ஊர்காவற்றுறைப் பட்டின சபையிலும், பட்டின சபைக்குச் சொந்தமான கட்டடங்கள் அனைத்திலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. ஊர்காவற்றுறையின் ஏனைய பகுதிகளிலும் கறுப்புக் கொடிகள் பறந்தன.

### காங்கேசன்துறை

காங்கேசன்துறையில் பெரும்பான்மையான இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. இதர நாட்களைப் போலன்றி, அன்றையதினம் எங்கும் அமைதி நிலவியது.

### பருத்தித்துறை

பருத்தித்துறைத் தொகுதியில் வியாபார நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

### சாவகச்சேரி

சாவகச்சேரித் தொகுதியில் துக்கதினம் மிகவும் சிறப்பான முறையில் அனுட்டிக்கப்பட்டன. எங்கும் அமைதி நிலவியது. அநேக இல்லங்களில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

### வட்டுக்கோட்டை

கோப்பாய், வட்டுக்கோட்டைத் தொகுதிகளிலும் துக்க தினம் சிறப்பாக அனுட்டிக்கப்பட்டது. இத்தொகுதி தமிழரசுக் கிளைகள் துக்கதின முயற்சிகளை திறம்பட வகுத்துச் செயல்படுத்தியுள்ளார்கள்.

## வெகு விரைவில் ஆரம்பமாகிறது

தமிழ் பேசும் மக்களின் இனப் போராட்டத்தைக் கருவூலமாகக் கொண்டு அமைக்கப்பட்ட விறு விறுப்பு மிக்க சுவையான தொடர் கதை 'சுதந்திர'னில் விரைவில் ஆரம்பமாகிறது............

ஈழத்தில் நடைபெற்ற சிறுகதைப் போட்டிகளில் முதற் பரிசில்களைத் தட்டிக்கொண்ட இரு இளைஞர்கள் கூட்டாகப் படைக்கும் உன்னத சித்திரம்; எழுச்சி மிக்க காவியம்; நம்மவரின் அலை ஓசை.

## வெண்ணெய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பு இருக்கவேண்டியிருக்க, உங்களில் சிலர் மனம் தளர்ந்து விட்டுக் கொடுக்குமளவுக்கு வந்து விட்டீர்களென்று அறிந்து மனம் வருந்துகிறேன்.

ஒரு புறம் நாம் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்டத்தை அணுகிக்கொண்டிருக்கிறோம். மறுபுறம் சிங்களத் தேர்வு பற்றிய சுற்றறிக்கைகளை எதிர்த்து வழக்குகள் தொடரப் பட்டிருக்கின்றன. இந்நிலையில் நீங்கள் குறைந்த பட்சம் செய்யக்கூடியது சிங்களத் தேர்வுகளுக்கு விண்ணப்பியாதிருத்தலே.

உங்களின் இவ்வளவு காலத்தய ஏகோபித்த எதிர்ப்பின் பிரதிபலிப்பை அரசாங்கமே உணர்ந்து வரும் கட்டத்தில் ஒரு சிலரேனும் எதிர்ப்பைக் கைவிட்டால் வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்த கதையாய் விடும்.

ஆகவே சிங்களத் தேர்வுக்கு விண்ணப்பியாதிருந்து தமிழ் பேசும் இனத்தின் உரிமைப் போராட்டத்தை வலுவடையச் செய்யுமாறு மீண்டும் ஒருமுறை வேண்டுகிறேன்.

## மத்திய வங்கி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். அவர்களில் இருவர் மட்டுமே தமிழர்கள் என்று அறியப்படுகிறது. அந்த இருவரில் ஒருவர் பட்டதாரி. 28 பேர் சிங்களவர்கள்.

இவ்வாறு தமிழர்கள் மத்திய வங்கிச்சேவையிலிருந்து ஒதுக்கப்படுகின்றனர். உத்தியோகங்கள் அனைத்தும் சிங்களவர்களுக்கே கொடுக்கப்படுகின்றன.

## பொலீசார்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி திரு அ. அமிர்தலிங்கமும், நல்லூர்ப் பிரதிநிதி டாக்டர் இ. மு. வி. நாகநாதனும் இடையில் குறுக்கிட்டுக் கேள்விக்களைத் தொடுத்த பொழுது சபை முதல்வர் தனக்கும் பாதுகாப்பு வெளிநாட்டு இலாகாவுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று கூறி மறுத்து விட்டார்.

அந்நேரத்தில் பாதுகாப்பு வெளி விவகார உதவி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எவ்வித பதிலும் கூறாது மௌனம் சாதித்து விட்டார்.

இப்பொழுது தமிழரசுக் கட்சியினர் பொலீசாரின் நடத்தைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

## குடியேற்றத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஆக்கிரமிப்பின் புதிய உருவமாகும்.

சிலாபம், நீர்கொழும்பு, தேவேந்தரமுனை ஆகிய பகுதிகளிலுள்ள சுமார் 100 சிங்கள மீன் பிடிக் குடும்பங்களைக் குடிபெயர்த்து, கிழக்கு மாகாணத்தில் பூநகரி, வாழைச்சேனை ஆகிய இடங்களில் குடியேற்ற தீவிர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று அறியப்படுகிறது.

குடியேற்றத்துக்காக இக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் அரசாங்கம் ரூ. 6000 வழங்க முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

## சேனையில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்தால் அவர்கள் கடைசியில் தமிழர்கள் பக்கமே நிற்பார்களென்றும் கூறினார்களாம். கடைசியில் அவரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழி

# உரிமை பெற உழைப்பது தமிழறிஞர் கடன்

## பாரதியும் தாகூரும் நமக்கு வழிகாட்டிகள்

### தமிழரசு வாலிப முன்னணி கலாச்சார மாநாட்டில் பண்டிதர் கா. பொ. இரத்தினம்

தமிழ் பேசும் மக்களின் குடியுரிமை, மொழியுரிமை, அரசியல் உரிமைகள் அனைத்தையும் பறித்து இந் நாட்டின் இரண்டாந்தர மக்களாக நடத்த முயலும் அரசாங்கத்துடன், அறவழியிலே போராட வேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் இந் நாட்டில் வாழும் தமிழ்ப் பேரறிஞர்களுக்கும் உரியதாகும். தமிழ் வாழ்ந்தாலன்றோ அதனை நாம் வளம் படுத்த முயலலாம். தமிழின் வாழ்வைச் சிதைக்கும் முயற்சிகள் நடக்கும் பொழுது அதற்கு எதிர்ப்புக் காட்டாமல், மக்களை ஒன்றுபட்டு எதிர்க்குமாறு வழிப்படுத்தாமல், தமிழறிஞர்கள் வாழ்தல் பொருத்தமானதா? அறிவுடைமையானதா?

பாரதியார், தாகூர் போன்ற பெரும் கவிஞர்கள் அரசியல் விழிப்பை மக்களிடையே உண்டாக்கவில்லையா? உரிமை பறிபோகும் பொழுது அதற்காகப் போரிடத் தன் எழுத்தைப் பயன்படுத்தாத எழுத்தாளர்களும், தம் பாட்டைப் பயன படுத்தாத கவிஞர்களும் உள்ளொளிமிக்க உண்மைத் தொண்டர்களாக இருத்தல் இயலுமா?

இவ்வாறு தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் ஒன்பதாவது தேசிய மாநாட்டின் அங்கமாகிய கலாச்சார மாநாட்டிற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஒய்வுபெற்ற பின் என்ன செய்யப் போகிறீர்கள் என்று பல நண்பர்களும், அன்பர்களும் என்னைக் கேட்கிறார்கள். அரசியலில் ஈடுபடப் போகிறேன் என்று கூறியவுடன் பெரும்பாலோர் திகைப்பு அடைகிறார்கள். சிலர் அரசியலில் பங்கு கொண்டு ஏன் இடர்பட, இன்னல்பட விரும்புகிறீர்கள் என்று கூறி, என் மீது இரக்கம் காட்டவும் விழைகிறார்கள். அரசியல் தொண்டு விரும்பத்தக்கதல்ல எனுங்கருத்து நம் மக்களிடையே இன்றும் காணப்படுகிறது. அன்றியும் அரசியலில் பங்கு கொள்வோர் செய்யும் தொண்டைப் போற்றி அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் சிலர் முன் வருவதில்லை. படித்தவர்களென்று தம்மைக் கருதுவோர் பலர் சுயநலத்தாலும், அறியாமையாலும், ஆணவத்தாலும் உந்தப்பட்டு அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களைக் குறை கூறுவதையே தம் பணியாகக் கொண்டுளர். இவர்கள் நம்மினத்துக்கும் மொழிக்கும் துரோகஞ் செய்பவர்களாவர்.

ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு இன்றியமையாதது அரசியலேயாகும். மாதவர் நோன்பும் மடவார் கற்பும் அரசியல் முறையாக நடவாவிடின் அழிந்து விடும் என்று கூறி நம் முன்னோர் இல்லறத்துக்கு மட்டுமன்றித் துறவறத்திற்கும் அரசியல் நன்றாக நடக்க வேண்டுமென்றும் மொழிந்துள்ளனர். உலகத்துயிர்களுக்கு மழை எவ்வாறு இன்றியமையாததோ அவ்வாறு அரசின் நல்லாட்சி இன்றியமையாததென வள்ளுவர் கூறுகிறார். நாட்டின் நலன்கள் யாவும் அரசியல் தொடர்பினாலேயே பெருக்கப்படுகிறது. மக்களின் வாழ்வியல் துறைகளில்ஒன்றையேனும் அரசியல் பாதிக்காமலிருக்கிறதா?

#### அரசியல் பற்றி அண்ணல் கருத்து

சமூகவாழ்வும், சன்மார்க்க வாழ்வும் அரசியலாலேயே செம்மை அடைகிறபடியால் ஜனநாயக நாட்டில் அரசியல் தொடர்பற்ற தொழில் எதுவுமில்லை. ஆகவேதான் அரசியல் தொடர்பு கொண்டுள்ளேன் எனக் காந்தியடிகள் கூறியுள்ளார். எனவே நம் மக்களும் அரசியலின் முதன்மையைச், சிறப்பை உணர்ந்து, அதிலே போதிய கருத்துக் கொள்ளின் நாம் இழந்த அடிப்படை உரிமைகள் அனைத்தையும் விரைவில் பெறலாம்.

#### சலுகைகள் பெற முயல்வது துரோகம்

ஓரினம் தன் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் இழந்து அவலப்படும் பொழுது அவ்வின மக்கள் யாவருமே அவ்வுரிமைகளைப் பெறுவதற்குப் போரிட வேண்டிய கட்டுப்பாடுடையர். அரசியற் கட்சியினர் மட்டுமே போரிட வேண்டும், அவர்களே இதற்குரியவர்களென்று கருதிப் பேசாமலிருத்தலா, உரிமைகளைப் பறித்தவர்களிடம் சில சலுகைகளைப் பெற முயலுவதோ இனத்துக்குச் செய்யும் முழுத் துரோகமாகும்.


#### வரலாறு கூறும் உண்மை

தமிழ் மக்களின் பண்டைய வரலாற்றை ஆராயப்புகின், அரசர்களை [illegible] லறிவு கூறி, அவர்கள் அரசி

### உரிமை மறுத்த...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கு மலைநாட்டில் ஆயிரக் கணக்கான ஆதரவாளர்களைத் திரட்டி விட்டது. இது யாருக்கு தோல்வி என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. மேலும் இப்படிக் கூறுபவர்கள் தங்களின் தாய்மொழியும் உரிமையிழந்து நிற்கும் தமிழ் மொழிதானே என்பதை மறந்துவிடுவது விசித்திரமாகவிருக்கிறது. ஒன்றன் பின் ஒன்றாக உரிமைகள் பறிக்கப்பட்டு வரும் இந்தக் கொடிய நேரத்தில் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களிடம் தோன்றியுள்ள ஒரே கேள்வி "யார் தமிழருக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடியவர்கள்?" என்பதுதான். அத்தகையோர் நிச்சயமாகத் தமிழரசுக் கட்சியினர்தான் என்பதில் சிறிதளவும் சந்தேகம் வேண்டாம். இதை அவர்களுக்கு நாளுக்குநாள்பெருகி வரும் ஆதரவு காட்டுகிறது.



யாழ். நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் 9-வது தேசிய மாநாட்டின், இரண்டாம் நாள் நிகழ்ச்சியான தொழிலாளர் மாநாட்டில், இலங்கைத் தொழிலாளர் கழகப் பொதுச் செயலாளர் திரு. பி. எம். கிருஷ்ணசாமி உரை நிகழ்த்துகிறார். அருகில் இருப்பவர் இலங்கைத் தொழிலாளர் கழக உப தலைவர் திரு. வி. இராமன். முதல் நாள் நடைபெற்ற கலாச்சார மாநாட்டின் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமைப் பேருரை நிகழ்த்துகிறார். மாநாட்டின் ஆரம்பத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகப் பொருளாளர் திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. கட்சிக் கொடியை ஏற்றிவைக்கிறார்.

### சந்திக்கு வந்தவை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் ஒழுங்கு படுத்திய ஒரு தேநீர் விருந்து வைபவத்தைப் பயன்படுத்தி அதில் தாங்களும் நுழைந்து கொண்டு பொது வரவேற்பளித்ததாக பத்திரிகைச் செய்தி பெற முனைந்த அரசியல் அனுமதேயங்களின் கபட நாடகம் வெகு விரைவாக அம்பலமாகியது.

இந்த வரவேற்பில் முக்கியஸ்தர்கள் பலரைக் கலக்கவைத்து, 'நல்ல பெயர்' எடுத்துவிட மிகக் கேவலமான முறையில் சாணக்கிய தந்திரங்கள் கையாளப்பட்டனவாம். அந்த ஊருக்கும், ஊர் மக்களுக்கும் எந்த வகையிலும் தொடர்பு அற்ற ஒரு பணம் தட்டும், பச்சோந்திப் 'பிரமுகர்' கலந்து கொண்டு காரியமாற்ற முனைந்ததுதான் விந்தையிலும் விந்தையான விடயமாம். இந்த விஷமியின் தகுடுதத்தங்களைத்தும் அந்தப் பகிரங்கக் கூட்டத்தில் அம்பலமாகி அவர் வெட்கித் தலைகுனிய நேரிட்டதாம்.

வரவேற்பு நடத்தியது யாரோ-ஆனால் வக்காலத்து வாங்கி-அதற்காக இரவு பகல் பாராது உழைத்த மேதை என்று பெயரெடுத்தவர் வேறு ஒருவர். சாதாரணமாகவா அவருக்குப் பெயர் கிடைத்தது? பல பொது ஸ்தாபனங்களுக்குள் தலையை விட்டு, கையாடல் பல புரிந்து, வசையும் கண்டு மாகப் பிடிபட்டு மானத்தைக் கப்பலேற்றிய அவர், இந்த வரவேற்பிலும் ஏராளமான கையாடல் செய்திருக்கிறாராம்.

துரோகப்பணிக்கு வரவேற்பளிக்கப் பணம் சேகரிக்கவும் ஆரம்பித்தாராம். ஆனால் அந்தப் பணத்துக்கும், உண்மையில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கும், எதுவித சம்பந்தமும் இல்லையாம். ஆகவே சேகரித்த பணத்தை தமது வழமைப் பிரகாரம் ஏப்பமிட்டு விட்டார் என்று மக்கள் கொதிப்படைந்துள்ளார்களாம்.

யலே நல்வழிப் படுத்திய புலவர்களைக் காண்கிறோம் இது அன்றைய தமிழ்ப் புலவர்களின் தனிச் சிறப்பென்பது புலனாகிறது. புறநானூறு போன்ற பழம்பெரும் தமிழ் [illegible] கின்றன.


பிரச்சினை தீர வழி

காதல்—கல்யாணப் பிரச்சினையா?

கணவன்—மனைவி பிரச்சினையா?

குடும்பப் பிரச்சினையா?

அல்லது

கிரகம், தோஷம், பில்லி, சூனியம், திருஷ்டி

முதலியன பிடித்துள்ளனவா?

கவலைப்பட தீர்கள்

உங்கள் கஷ்டங்களை அறவே நீக்கி, எதிர்பார்க்கப்படும் பலனை மந்திர சக்தியாலும், தெய்வ பலத்தாலும் பெற்றுக்கொள்ள முடியும்.

விபரங்களுக்கு எழுதவும், அல்லது நேரில் வந்து சந்திக்கவும்

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மந்திராச்சாரி

பீ. எம். திஸாநாயக,

(நான்கு தேவாலயங்களின் பிரதம தர்மகர்த்தா)

371, டாம் வீதி, கொழும்பு-12.

அருந்த எண்ணை அலுவலகம்

கம்பனி.



ஆசியாவின் ஆகச் சிறந்த சிமிந்தி

'ஓனோடா'

தான்

விநியோகஸ்தர்கள்

சென்ற். அந்தனீஸ்

ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்.,

516, ஸ்கின்னேர்ஸ் ரோட் தெற்கு,

கொழும்பு-10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊருக்காக அல்லும் பகலும் உழைத்து வீடு கட்டிய தொழிலாளி தனக்கென்றொரு வீடு இல்லாது திண்டாடுகிறான். உழவனும் தன் உழைப்பினால் கிடைக்கும் முழுப் பயனையும் அடைந்து விடுவதில்லை. தேயிலைத் தோட்டத்திலேதான் தொழில் பார்த்தாலும் உயர்ந்த ரகத் தேயிலையை அந்த ஏழைத் தொழிலாளிகளால் அனுபவிக்க முடிவதில்லை

பனியென்றும், வெய்யிலென்றும், மழையென்றும் பாராமல்; உச்சி மலையின் நுனியில் ஏறி எடுத்து வரும் தேயிலையை அவனால் அனுபவிக்க முடியவில்லை. ஆமாம்! உயர்ந்த ரகத் தேயிலையைப் பெறுவதற்காக உன் மானனானான் வேலு. அவனால் அதை ருசி பார்க்க முடிந்ததா......?

டிமேக்கரென்ன யாரைக் காக்காய் பிடித்தாலும் அந்தத் தேயிலையை ருசி பார்த்துவிட முடியாதென்பது அவன் அறியாத விஷயமல்ல. இருந்தாலும் ஒரு நப்பாசை. டிமேக்கர் பழனிச்சாமி முன் மண்டியிட்டு நின்றான் வேலு.

"என்னடா வேலு?"

"ஒன்றுமில்லீங்க சும்மா தானுங்க..."

"சும்மாதான் இந்தப் பக்கம் தலைகாட்டமாட்டாயே! சும்மா சொல்லு."

"இல்லீங்க வந்து"

"என்னடா இழுக்கிறே! வெட்கப்படாமல் சொல்லு"

"கொஞ்சம் தேயிலை வேணுங்க"

"பூ! இதுதானா? இதற்குத் தானா இவ்வளவு சிரமப்பட்டாய். கொஞ்சம் இருந்துக்கே இதோ வந்திட்டேன்" பார்வையை வீட்டின் உள் பக்கம் செலுத்துகிறார் பழனிச்சாமி.

"கண்ணு"

"என்னப்பா?"

"இந்தாம்மா வேலுக்குக் கொஞ்சம் தேயிலை கொண்டு வந்து கொடம்மா"

"சரீப்பா"

"டேய் வேலு யாருக்கும் காட்டாமல் கொண்டு போ, கண்டால் தொலைச்சுடுவாங்க" தேயிலையை வேலுவிடம் கொடுத்த டீமேக்கர் எச்சரித்தார். தான் ருசி பார்க்கவிரும்பிய தேயிலை அதுவல்ல என்பது வேலுக்குத் தெரிந்ததுதானென்றாலும் டீமேக்கரிடம் சொல்லப்பயந்து கிடைத்ததைக் கொண்டுசென்றான். 'எங்கள் வீட்டில் பாவிக்கும் தேயிலையைப் பார்க்கிலும் இது கொஞ்சம் ரகத்தில் சிறந்தது, பரவாயில்லை'—மனங் கூறியது.

சாதாரணமாக கங்காணிகள், டீமேக்கர்கள், ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள் போன்றவர்களுக்கு மாதம் ஒரு இறாத்தல் நல்ல ரகத் தேயிலை ஓசியில் கிடைக்கும் என்பது அவனுக்குத் தெரியும். தொழிலாளர்களுக்குந் தான் கொடுக்கிறார்கள். ஆனால், சிறிது மட்டமானது தான். அந்த டீமேக்கராலேயே அனுபவிக்கமுடியாத அந்த உயர்ந்த ரக தேயிலையை ஒருதரம் ருசி பார்த்து விடவேண்டுமென்பதுஅவன் விருப்பம், மனம் தேயிலையை நாடிச் செல்ல, கால்கள் வீடு நோக்கி விறு நடை போட்டன.

"ஏன்டா வேலு இதென்னடா உன்கையிலே?" பெற்றவள் மருதாயி குரல் கொடுத்தாள்.

"கொஞ்சம் தேயிலை"

"இங்கேதான் வேண்டியளவு இருக்கே!"

"இது கொஞ்சம் நல்ல தேயிலை அம்மா! டீமேக்கர் கொடுத்தாங்க"

"நல்லதும் கெட்டதுந் தான், தேயிலையென்றால் எல்லாம் ஒன்றுதாண்டா"


வேலு பேசவில்லை. மனம் பேசியது 'அவள் அனுபவம் அவ்வளவுதான்.'

"ஏன்டா சாப்பிடல்லை" மீண்டும் பெற்றவள் குரல்.

"பசியில்லை" பேச்சுக்கு முற்றுப்புள்ளி யிட்டவனாகப் படுக்கையில் விழுந்தான்.

## தேவாதி தேவன்

"அந்தக்காலத்தில் கற்பனைக்குமெட்டாத அதிக உயரமான அரக்கர் வாழ்ந்திருக்கவேண்டும். அவர்களே கடலைத் தோண்டி மண்களை இங்கே கொண்டு வந்து குவித்திருக்கிறார்கள். ஆமாம் கடல் எப்படி இருக்கும்? 'கடலைப்போய்ப்பார்ப்பதற்கு ஒரு நாள் பிரயாணம் வேண்டியிருக்கு' என்று அம்மா சொல்லுவாள். நாங்கள் இந்தியர்களாமே! கடலையே தெரியாத இந்தியர் நாம் கடலைத் தாண்டி எப்படி இங்கு வந்தோம்? இந்த மலைகளையும் நாம் ஏதோ பெரியது என்று எண்ணிவிட்டோம். பிரமாண்டமான



உலகங்களைப் படைத்த கடவுளுக்கு இது ஒரு தூசு" கிழிந்த கம்பிளியால் தலையிலிருந்து கால்வரை இழுத்துப் போர்த்தவண்ணம் சிந்தனையிலாழ்ந்த வேலு நித்திரையானான்.

கண்டியிலிருந்து இருபத்தெட்டு மைல் மலைத் தொடர்ச்சியில் பிரயாணம் செய்வதால் விளாத்தங்கொடையோகலாம் என்பது பலருக்குத் தெரிந்ததுதானென்றாலும் அக்கிராமத்திலிருந்து மேலும் இரண்டு மைல் மலைமேல் பிரயாணம் செய்தால் வம்புறுகாமம் என்றொரு [illegible] என்பது ஒரு சிலருக்குத் தான் தெரியும். அத்தோட்டத்தில் பதினுறு வயதுக்குட்பட்ட துண்டு வேலையாளர்களில் ஒருவன் வேலு. நான்காம் வகுப்பில் நான்கு வருடம் பொறுமையாக இருந்தமைக்காக அத்தோட்டப் பாடசாலையிலிருந்து ஆசிரியர்களால் வெளியேற்றப்பட்டவர்களில் அவனும் ஒருவன்.

பனிப்புகார்களைத் கிழித்த வண்ணம் கிழக்கிலிருந்த மலைத் தொடர்ச்சியினூடே தோன்றினான் ஆதவன். வேலுவைத் தட்டிஎழுப்பித் தேநீரைக் கொடுத்தாள் தாய். இருக்கும் இடம் தவிர சுற்றவர இருக்கும் மலைகள் எதுவும் கண்களுக்குத்தெரியவில்லை. எங்கும் பனிப்புகார். சற்றுத் தூரத்திலிருந்த மரஞ்செடிகளே கண்களுக்குத்தெரிய மறுத்தன. வேலு தேநீரைப் பருகிவிட்டு வெளியே செல்ல எத்தனிப்பதைக் கண்ட மருதாயி "வேலு நீ இன்று வேலைக்குப் போகவேண்டாம்" என்றாள்.

"ஏன் அம்மா?"

"வேலை நிறுத்தமாம்"

"எதற்காக?"

"எனக்கென்ன தெரியும்?" மருதாயி பெருமூச்சு விடுகிறாள். அன்று வேலைக்குப் போகாததால் கூலியில் துண்டு விழப்போகிறது. ஒரு நாள் உழைப்பு என்றால் சாமானியமா? கொழுந்து கொய்யும் பெண் தொழிலாளிதான் மருதாயி. அவள் கணவன் இரண்டு மாதமாகப் படுத்த படுக்கையாகக் கிடக்கிறான். "வேலு" தந்தையின் குரல் கேட்டு வேலு ஓடிவருகிறான்.

"நீ வேலைக்குப் போகாவிட்டாலும் கூட்டத்துக்குப் போயிட்டுவா" படுக்கையில் கிடந்தபடி இராமன் கட்டளை இட்டான். மருதாயி மறுக்கவில்லை. வேலுவை வெளியே போக அனுமதி கொடுத்தாள்.

"தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" கரகோஷம் பனிப்புகாரைப் பிளக்கிறது. மெள்ள மெள்ளக் கூட்டம் நடக்குமிடத்தை நாடிச் செல்கிறான் வேலு.

கூட்டமொன்று நகர்ந்து நகர்ந்து 'பாக்டரியை' நோக்கி முன்னேறுகிறது. கூட்டத்தைக் கண்டு பாக்டரியில் இருந்த தொழிலாளரும் பயந்து வெளியேறுகின்றனர். வேலுக்கு ஒரு நப்பாசை தோன்றியது. நல்ல தருணம்; பாக்டரி திறந்து கிடக்கிறது: யாருமில்லை. கூட்டத்திலிருந்து நழுவியவன் மெதுவாக அடிமேல் அடிவைத்துப் பின்பக்கமாகச் சென்று பாக்டரிக்குள் நுழைந்தான். அவன் ஆசைப்பட்ட பொருள் அங்கே குவியலாகக் கிடந்தது. சட்டைப் பைக்குள் நிரப்பிக்கொண்டு சந்தோஷத்துடன் வெளியே வந்தவனை 'டுமீல்' என்றொரு சத்தத்துடன் துப்பாக்கிவேட்டு வரவேற்றது.'

"ஐயோ அம்மா" வேலுவின் கதறல்-ஒரே ஒருதரம்.

பாக்டரி, நாசவேலையிலிருந்து காப்பாற்றப்பட்டதாகக் கருதிய துரை துப்பாக்கி சகிதம், விழுந்து கிடந்தவனைப் பார்க்க வந்தபோது அதிர்ச்சிக்குள்ளானார்.

வேலு கண் விழித்தபோது தோட்டத்து ஆசுபத்திரியில் கிடந்தான். காலில் பெரிய கட்டுப்போடப்பட்டிருந்தது அவன் ஆசுபத்திரியில் இருக்கும்வரை அந்தத் தேயிலையிலேயே அவனுக்குத் தேநீர் போட்டுக் கொடுக்குமாறு கட்டளையிட்டார் துரை. வேலுவுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டதும் மரண வேதனையிலும் ஆனந்த

(15-ம் பக்கம் பார்க்க)

## கையாலே...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்புள் குமைந்தது, அவன் விட்டு வைத்தானா?

கறுக்காய்ப் பழமே மச்சி
கருங்காலிப் பெட்டகமே;
பொறுத்தால் சிலநாளில்
பொன்னுருக்கிக் கட்டிடு-
வேன்.

அவ்வளவுதான்! அவளுக்குக் கோபமும் 'குளறுவையும்' பொத்துக் கொண்டு வந்தது. பொறு பொறு என்று பொறுத்தாகி விட்டது. இன்னும் எத்தனை காலம் பொறுப்பது? வருவதோ மாரிமழை; வெள்வாடை 'வெடுவெடு' என்று வீசிக் கொல்லாமற் கொல்லும். அவளுக்குச் சரியான வைராக்கியம் பொங்கிவிட்டது.

வெட்டவெளிக்கும் மச்சான்
வெள்வாடைக் கூதலுக்கும்:
கட்டாத தாலி இனிக்
காத்திருந்து என்ன பலன்?

என்று நறுக்காகப் பாடிவிட்டாள். கண்களிலிருந்து கண்ணீர் சொட்டிவிட்டது. அவ்வளவு போதுமே! அவனது இரும்பு மனம் இளகிவிட்டது. "சேச்சே; இதுக்கெல்லாம் கண்கலங்கிறியே; இவ்வளவு காலமும் சொல்லி வந்தது போல இப்போ சொல்லவில்லை. சொந்தச் சேனை போட்டிருக்கன்; மழை விழுந்ததும் 'மையோரி'ச் சேனை பிடுங்கின மறுகணமே நம்ம கல்யாணம் 'ஜாம் ஜாம்' என்று நடக்கும்; இருந்து பாரன்". என்று சொல்லிக் கொண்டு சால்வையால் அவளது கண்களைத் துடைத்து விட்டான். இதோ, அவன் கூறிய கவியையும் அதன் கருத்தையும் பாருங்களேன்!

மையோரிச் சேனை மச்சி
மழைவிழுந்து நான்பிடுங்கி;
கையாலே பொன்தாலி
கட்டிடுவேன் கண்மணியே!

அவளுக்கு ஒருவாறு அமைதி ஏற்பட்டது; பாற்சோதிப் பல் வரிசையை மெல்லக் காட்டிப் புன்னகை புரிந்தாள். அவனுக்கு அது பொன்னகையாகத் தென்பட்டது. அள்ளி அணைக்க வேண்டும் போல் இருந்தது. ஆனல் அவள்...""?

சுதந்திரன் சந்தா விபரம்
இலங்கை—இந்தியா உட்பட
வருடச் சந்தா ரூபா.10-00
இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!

வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி
ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.
ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.
விலை ரூபா 1-25
தபால் செலவு வேறு
தயாரிப்பாளர்கள்:
S. P. S. ஜெயம் கம்பெனி,
மதுரை.
இலங்கையில் ஸோல் ஏஜண்ட்:
M. A. R. S. மனுவேல் நாடார்
அன் கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீறு கொண்ட இனமே விடுதலைபெறும்

# ஒரு தேசிய இனமாக இலங்கை என்றும் இருந்ததில்லை

## இது வரலாறு காட்டும் உண்மை

## தமிழரசு வாலிப மாநாட்டில் தலைமைப் பேருரை

மூடவனுக்கு கொம்புத் தேன் எட்டாது, அவன் அதை மறப்பது நல்லது. ஆனல் இரண்டு காலும் கையும் உடையவனுக்கு கொம்புத் தேன் எட்டும். எனவே அவன் அதை முயற்சிப்பது-நல்லது; கடமையுமாகும். கோழைகளுக்கும் அடிமைத் தளையை ஏற்றவர்களுக்கும் அரசியல் சுதந்திரம் எட்டாது. ஆனல் வீறு கொண்ட மக்களுக்கு அது எட்டும் பொருளே, எனவே அதனை முயன்று அடைவது அவர்கள் கடமையுமன்றித் தவிர்க்க முடியாத செயலுமாகும். அசல் சுயநலத்துக்காக ஒரு சிலர் சிங்களத் தலைவர்களை அண்டி நிற்கிருர்கள். இவர்களால் அரசியலில் ஒரு மாற்றமும் உண்டாக்க முடியாது.

இவ்வாறு இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் ஒன்பதாவது தேசிய மாநாட்டிற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் முன்னணித் தலைவர் திரு. சி. கதிரவேற்பிள்ளை கூறினர்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

யாழ். மாநகர முதல்வர் அவர்களே,

தமிழ் பேசும் பெருங்குடி மக்களே! தமிழரசு வாலிப முன்னணி அங்கத்தவர்களே! எங்கள் அழைப்பினை அன்புடன் ஏற்று இலங்கையின் பல பகுதிகளிலுமிருந்து இங்கு வந்த மதிப்பிற்குரிய விருந்தினர்களே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம். உங்கள் வரவு நல்வரவாகுக!

இன்று நாம் முன்னெரு போதுமில்லாத கஷ்டமும் நெருக்கடியும் நிறைந்த ஒரு காலத்தை எதிர் நோக்கி நிற்கிருேம். இதனை நாம் எல்லோரும் ஆலோசித்து அறிந்து ஏற்றவாறு செயற்படுவது மிக அவசியமாகின்றது. நடவடிக்கைத் துறையில் இளைஞர்களுக்கு முக்கிய பொறுப்பும் பங்கும் உண்டு.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை ஏற்றலும், அக்கட்சி காலத்துக்குக் காலம் வெளியிடும் திட்டங்களையும் விசேஷ இயக்கம், போராட்டம், சத்தியாக்கிரகம் ஆகியவற்றிலும் முழுச் சக்தியோடு பங்குபற்றுதலும் எம்பொறுப்பும் கடமையுமாகும். ஆனல் கட்சியின் கொள்கைகளைத் திருத்தவும் மாற்றவும் வேண்டுமாயின், அதற்காக முன்னணியில் நின்று நாம் சிந்தித்து உள்ளிருந்தே இயக்குவது எங்கள் கடமையாக இருக்கிறது.

எதிர்காலத்தையும் முக்கியமாக அது எங்களைப் பாதிக்கும் போக்கினையும் நாம் ஆராய்ந்து அறிவது அவசியம். இதிலிருந்தே நாம்எமது கொள்கைகளையும் நடைமுறைத் திட்டங்களையும் ஏற்றவாறு மீண்டும் ஆலோசித்து வகுக்கலாம். இதற்கு, நாம் இதுவரைகாலம் கண்டதைக் கணிப்பது அத்தியாவசியம்.

### ஒன்றுபட்ட இனமாக வாழவில்லை

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டதான இலங்கையின் சரித்திரத்தின் அடிப்படை உண்மைகளை நாம் தெரிதல் வேண்டும். சரித்திரமறிந்த காலம் தொட்டு இலங்கையில் தமிழ் பேசும் மக்களும் சிங்களம் பேசும் மக்களும் தனித்தனி அரசர்களின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளாகப் பிரிந்து வாழ்ந்திருக்கின்றனர். காலத்துக்குக் காலம் படைப்பலம் உடைய ஒரு அரசன் அயல் இராச்சியத்தின்மேல் படை எடுத்து வெற்றி கொண்டு சிறிது காலம் இலங்கை முழுவதையும் தன்னுட்சியின் கீழ் ஒன்று படுத்த முயன்றுன். ஆனல் இந்த ஒற்றுமை படை எடுப்பாலும், வெற்றியாலும், ஆட்சி வலிமையினலும் உண்டான ஒரு பொய்யான ஒற்றுமையேயன்றி உண்மையாக இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் கருத்திலும், உணர்ச்சியிலும், சமூக அரசியல் வாழ்விலும் ஒரு தேசிய இன மக்களாக ஒரே நாட்டு மக்களாக வாழவில்லை.

### வரலாற்று உண்மைகள்

இப்படியே போர்த்துக்கேயர் வந்த காலத்திலும் இலங்கை வாழ் மக்கள் மூன்று அரசர்களின் கீழ் மூன்று இராச்சியங்களில் வாழும் மக்களாகப் பிரிந்திருந்தனர். அப்போதும் இலங்கைவாழ் மக்கள் எல்லோரும் ஒரே தேசிய இன மக்கள் என்றும், இலங்கை ஒரு இனத்தேசம் என்றும் ஒருமைப்பாட்டினை அரசியல் வாழ்வில் எய்தவில்லை.

பதினைரும் நூற்றுண்டு முதல் ஐரோப்பாவில் நடந்த பலபடை எடுப்புகள், யுத்தங்கள் முதலிய காரணமாக அங்கு இனத் தேசங்கள் உருவாகின போல், இலங்கையானது போர்த்துக்கேய, ஒல்லாந்த படையெடுப்பால் ஒரு இனத்தேயமாக உருவாகவில்லை-இனத்தேயமாவது: ஒரு தேசிய இனத்துக்கு ஒரு நாடாக அமைதல்.

போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய படையெடுப்பை இலங்கை மக்கள் எல்லோரும் ஒன்று திரண்டு ஒன்ருக எதிர்க்கவில்லை, அப்போதும் இலங்கையில் மூன்றரசர்களின் கீழ் மூனறு இராச்சியங்கள் இயங்கின. ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்பும்,கடைசியாகக்கண்டி இராச்சியம் அவர்கள் கைக்குட்பட்ட பின்பும் இத் தேசிய ஒருமைப்பாடு சாதாரண மக்களிடம் உண்டாகவில்லை.

### சுதந்திர நாகமும் ஒருமைப்பாடும்

ஆங்கில ஆட்சியின் இறுதி ஐம்பது வருடங்களுக்குள் தான் இங்கு ஆங்கிலம் படித்த சிங்கள—தமிழ்த் தலைவர்கள் தங்களை இலங்கையர் என்ற ஒரு தேசிய இனத்தவராகக் கருத்திலும், உணர்ச்சியிலும் கொண்டு ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெற்றுச் சுதந்திர நாடாகத் திகழவேண்டுமென்று நினைத்தனர். அதற்காகவும் உழைத்தனர். ஆனல் இப்படி இலங்கையர் என்ற தேசிய இன ரீதியில் நினைத்ததும், அரசியல் நடத்தியதும் படித்த இலங்கையர்-அதாவது ஆங்கிலம் படித்த இலங்கையர் என்றவரின் கனவாகவும் இலட்சியமாகவும் இருந்தது.

### சிங்களத் தலைவரின் அரசியல் புரட்டு

இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயகா அவர்கள் இலங்கையின் அரசியல் சமுதாயத்தை ஆராயுமிடத்தில் (1) கண்டிச் சிங்களவர் (2) கரை நாட்டுச் சிங்களவர் (3) தமிழர், என்ற மூன்று பிரிவு மக்களிடையே தாவப்... [illegible] ... இலங்கையை ஒரு நாடாக ஒற்றுமைப் படுத்துவதற்குச் சுவிற்சர்லாந்தில் இருப்பது போன்ற ஒரு கூட்டாட்சி அரசியல் முறையே நல்லது என்றும் கருதியிருந்தார் அவர்கள் தமது பிற்காலத்தில் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்குக் கையாண்ட கொள்கையையும் அதன் பலாபலன்களையும் மக்கள் அறிவார்கள். இதே சிங்களத் தலைவர் தான் ஆடி 57 ல் பண்டாரநாயகா--செல்வநாயகம் ஒப்பந்தத்தில், பிராந்திய சபைக் கொள்கையை ஏற்றுக்கொண்டார். இது அவருடைய அரசியல் வாழ்வில் காணும் முரண்பாடுகளுக்குள்ளே கிடக்கும் உள்ளக்கிடக்கையை உணர்த்துவதாகும்.

### சுய நலமா? அரசியல் விவேகமா?

ஆங்கிலேய ஆட்சிபீடம் அளித்ததும், அளிக்கவிருப்பதுமான அதிகாரங்கள் சிங்கள மக்கள் கையிலே தேங்கித் தமிழ் மக்களைப் பாதிக்கும் என்று அறிந்து சில தமிழ்த் தலைவர்கள் 1939 முதல் தமிழ் மக்களுடைய சக்தியனைத்தையும் திரட்டித் தமிழ்க்காங்கிரஸ் என்ற ஸ்தாபனரீதியாக எதிர் வரும் கெடுதியை விலக்க முயற்சித்தனர். இவர்கள் பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கும் மற்றச் சிறுபான்மையோர் எல்லாருக்கும் மிடை சமநிலைப் பிரதிநிதித்துவம் சட்டசபையில் வேண்டும் என்று பல வருடங்களாக வாதாடி, எதிர்ப்பும் காட்டினர். இக்கோரிக்கை தோல்வியுறவே அத் தமிழ்த் தலைவர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் சேர்ந்து ஒத்துழைத்தனர். "கிட்டாதாயின் வெட்டென மற" என்ற மந்திரத்தை ஓதி இவர்கள் முன்னும் பின்னுமாக ஒத்துழைப்பில் இறங்கினர். இச் செய்கை சுய நலத்தால் உண்டானதோ, அல்லது, மேலும் எதிர்க்கும் துணிவும் வல்லமையும் இல்லாததால் உண்டானதோ அல்லது, எதிர்ப்பினல் பெற முடியாததையும், தவிர்க்க முடியாததையும், ஒத்துழைப்பால் பெற்றும் தவிர்த்கொள்ளலாம் என்ற கொள்கையால் உண்டானதோ என்பது பற்றி அபிப்பிராய பேதம் இருக்கலாம். ஆனல் இக்காலத்தில் 'கிட்டாதாயின வெட்டென மற' என்னும் மந்திரத்தையோ, ஒத்துழைப்பு ராஜதந்திரத்தையோ ஏற்கும் தலைவர்களில்லை. அசல் சுயநலத்துக்காக ஒரு சிலர் சிங்களத் தலைவர்களை அண்டி நிற்கிறார்கள் இவர்களால் அரசியலில் ஒரு மாற்றமும் உண்டாக்க முடியாது.

"கிட்டாதாயின் வெட்டென மற" என்ற மந்திரத்தைப் பற்றி நான் இங்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். மூடவனுக்கு கொம்புத்தேன் எட்டாது; அவன் அதை மறப்பது நல்லது. ஆனல் இரண்டு காலும் கையும் உடையவனுக்கு கொம்புத்தேன் எட்டும். எனவே அவன் அதை அடைய முயற்சிப்பது நல்லது—கடமையுமாகும். கோழைகளுக்கும் அடிமைத் தளையை ஏற்றவர்களுக்கும் மனித உரிமைகளும் அரசியல் சுதந்திரமும் எட்டாது. ஆனல் வீறுகொண்ட வீரமும் தியாகமும் கொண்ட மக்களுக்கும் அவை எட்டும் பொருளே. எனவே அவற்றை முயன்று அடைவது அவர்கள் கடமையுமன்றித் தவிர்க்க முடியாத செயலுமாகும்.

(தொடரும்)

# காலத்தைக் கடந்து நிற்பது

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்காகப்பெரும் போர் புரிந்து தம் நாட்டுப்பற்றை-மொழி உணர்வை-தியாக சிந்தையை கடமை தவருது எடுத்துக் காட்டிய தமிழகத்து முஸ்லிம்களின் மகத்தான பணியைப்பாராட்ட சொற்களே கிடையாது.

### ஏகாதிபத்திய முஸ்லிம் பேரரசுகள்

மேலையினங்கள் ஏழாம் நூற்றுண்டில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பின்பும் அவை என்றும் போலவே தென்னக மக்களுடன் அரசியல், கலை கலாச்சாரத் தொடர்புகள் கொண்டிருந்தன. ஆனல் வடதிசை இஸ்லாமிய அரசு என்றும் போலவே தமிழ் நாட்டு ஹிந்து-இஸ்லாமிய அரசுகளுடன் போர் தொடுத்துத், தமிழகத்து இஸ்லாமிய மக்களையும் அவர்களின் அரசையும் சூறையாடிக்கொண்டிருந்தது. கி.பி. பன்னிரண்டாம் நூற்றுண்டு முதல் பதினைரும் நூற்றுண்டு வரையிலுள்ள சுமார் நான்கு நூற்றுண்டுகளாக டெல்லியை நிலைக்களமாகக் கொண்டு மாறி மாறி அரசு புரிந்த அடிமை, கில்ஜி, துக்ளக், சயித், லோடி ஆகிய ஐந்து ஆப்கானிஸ்த மரபினரும், அதைத் தொடர்ந்து மூன்றரை ஆண்டிற்குப் பின் பாபர், ஹுமாயூன், அக்பர் 1556-1605, ஜெஹாங்கிர் 1605-1627, சாஜகான் 1627-1658, ஔரங்கசீப் 1658-1707 ஆகிய முகலாயப் பேரரசர்களும் தம் ஏகாதிபத்தியத்தை விரிவு படுத்தி நிலைநாட்டத் துடிதுடித்தனர். ஆனல் இவர்களில் கில்ஜி, துக்ளக் மரபினர், அக்பர் கால முதல் முகலாயப் பேரரசர்கள் ஆகியோர் தென்னகத்தின் மீது அடிக்கடி படை நடத்தித் தோல்வியையும்-வெற்றியையும் மாறி மாறி அனைத்து வந்தனர். கில்ஜியின் காலத்தில் பாண்டிய நாட்டின் பல சிற்றரசுகள் போர்க்களத்தின் வெற்றியால் டில்லியின் ... [illegible] மாகாணங்களாக்கப் பட்டன.

(அடுத்த இதழில் முடியும்)

### அ. எ. வி. சங்க வழக்கு முன்போடப்பட்டது

அரசாங்க எழுதுவினைஞர் சங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படாததை எதிர்த்துத் தொடங்கியிருக்கும் மூன்ருவது வழக்கு, முன்பு அறிவித்தபடியில்லாமல் 4 மாதங்கள் முன்னதாகவே விசாரணைக்கு வந்து விடுமென்று தெரிகிறது. இவ்வருடம் ஒக்டோபர் மாதம் நடைபெறுவதாக விருந்த இவ்வழக்கு விசாரணையை செப்டம்பர் மாதத்துக்குள் முடித்துவிடவேண்டுமென்று திரு எம். திருச்செல்வம் கியூ. சி. அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க 17-6-63 ல் விசாரணைக்கு எடுப்பதென அறிவிக்கப்பட்டுள்ளது.


## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்



# ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்

மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளிஏப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனம்

15 நாள் டின் ரூபா 3-00
30 நாள் டின் ரூபா 5-75

தபால் செலவு /-95

## ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புனர் ஜென்மம்

## இலவச விநோத குறுக்கெழுத்துப் போட்டி

### இடமிருந்து வலம்

1. சினிமாஸ் திரைகளில் ஓடிக் கொண்டிருக்கும் தமிழ்ப் படம்.

4. இவர் ஒரு பரம...... ஆனல் மாறியிருக்கிருர்.

5. இப்படத்தில் பத்மினிக்குக்கொடுக்கப்பட்டுள்ள பாகம்.

8. கதாநாயகனுகத் தோன்றும் நடிகரின் பெயர்.

10. இப்படத்தின் கலை அம்சங்களைக் கவனித்திருப்பவர்.

11. இசை அமைப்பாளரின் பெயர்.

### மேலிருந்து கீழ்

1. ராகினி இப்படத்தில் இந்தப் பாகத்தில் தோன்றுகிருர்.

2, கதாநாயகனை மயக்கும் இந்த விஷம் நம்மில் அனேகரையும் மயக்கத்தான் செய்கிறது.

3. அண்மையில் மறைந்த நடிகர் மாறிக்கிடக்கிருர்.

6. கதாநாயகன் தலைகீழாக நிற்கிருர்.

7. கதாநாயகனை மடக்க மாறிவிட்ட இது நடக்கிறது.

9. திரைக் கதை—வசனத்தை எழுதிய ஸ்ரீதர் தன் கைத்............முழுவதையும் காண்பித்திருக்கிருர். ஆனல் மாறியிருக்கின்றது.

..................... இவ்விடத்தில் கத்தரிக்கவும் .....................

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பு | ன | ர் | ஜெ | ன் | 2 ம | 3 ம் |
| ஷ் | [shaded] | ம | [shaded] | [shaded] | 4 | |
| 5 | 6 ர் | | 7 தி | [shaded] | [shaded] | ரா |
| [shaded] | 8 | ணே | | 9 ன் | [shaded] | யி |
| 10 | ங் | | [shaded] | | [shaded] | [shaded] |
| [shaded] | 11 | ல | ப | | | வ் |

பெயர் ..................................................................

முகவரி ..................................................................

..................................

..................... இவ்விடத்தில் கத்தரிக்கவும் .....................

### விதிகள்:-

1. ஒருவர் எத்தனை விடையும் அனுப்பலாம்.
2. 'சுதந்திர'னிலிருந்து கத்தரிக்கப்பட்ட கூப்பன் மட்டுமே அனுப்பிவைக்கப்படவேண்டும்.
3. முழு விடைகளும் பூர்த்தி செய்யப்படாத கூப்பன்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4, பெயரும், முகவரியும் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
5. இவ் விநோதப் போட்டி சம்பந்தமாக சுதந்திரன் காரியாலயத்துடனே, அல்லது சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்துடனே எவ்விதக் கடிதப் போக்கு வரத்தும் இருத்தலாகாது.
6. இப்போட்டியில் சுதந்திரன் காரியாலய ஊழியர்களோ, சினிமாஸ் லிமிட்டெட் ஊழியர்களோ பங்குபற்ற முடியாது.

### போட்டிக்கு கட்டணம் கிடையாது

**பரிசு விபரம்:**

சரியான விடைகளிலிருந்து பரிசுக்குரிய மூன்று கூப்பன்கள் மட்டும் தெரிவு செய்யப்படும். அவற்றிற்கு முறையே மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

முதலாவது பரிசு: 6 றிசர்வ் அனுமதிச் சீட்டுக்கள்.

இரண்டாவது பரிசு: 5 றிசர்வ் அனுமதிச்சீட்டுக்கள்

மூன்ருவது பரிசு:— 4 றிசர்வ் அனுமதிச்சீட்டுக்கள்

இதைவிட சில ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

விடைகளுடன் சினிமாஸ் லிமிட்டெட் திரைகளில் அண்மையில் படம் பார்த்த அனுமதிச் சீட்டின் அடிக்கட்டை ஒன்று மட்டும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

★ போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.

★ விடைகள் அனுப்பும் தபால் உறையின் மேற்புறத்தில் 'புனர் ஜென்மம்' இலவச விநோதப் போட்டி' என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

விடைகள் அனுப்பப்படும் விலாசம்:-

கலைப்பூஞ்சோலை,
தபால் பெட்டி 1183,
கொழும்பு.

முடிவுத் திகதி:- 19-2-63.

சரியான விடையும், பரிசு பெற்ருேர் விபரமும் 24-2-63 சுதந்திரனில் வெளியாகும்.

# மைனுவின் கன்னத்தில் நசீரின் நான்கு விரல்கள்

அடுத்துக் கெடுப்பதிலே கை தேர்ந்தவளான விஜயாவின் சூழ்ச்சி வலைக்குள் விழ்ந்து விட்ட ஹேமா



மைனுவதி

பெண்மைக்கு இலக்கணங்களான நற்குணங்களை விட்டு விட்டு தன் கணவனுடைய சொல்லுக்கு மாருக நடக்க வாரம்பிக்கிருள்.

மனைவியின் நற்குணங்கள் யாவும் மறைந்து, அவள் மாறி வருவதை உணர்ந்த கணவன் பல வழிகளைக் கையாண்டும் எதுவும் பலன் கிடைக்காது போகவே அன்று அவளை அறைந்தும் விட்டான்.

இடது கன்னத்தில் பட்ட அடியோ] பலமான அடி தான். பட்டுப் போன்ற ஹேமாவின் கன்னத்தில் அவனின் நான்கு விரல்களும் பதிந்துவிட்டன. பதறித் துடித்தாள். அடிபட்ட இடத்தைத் தடவிக்கொடுத்தும் கூட பெருக்கெடுத்த கண்ணீரைத் தடை செய்ய முடியவில்லை.

"றியல்...றியல்..." (இயற்கையாக அமைந்துவிட்டது என்ற அர்த்தத்துடன்)... ஆர்ப்பரித்தார் டைரக்டர் ரகுநாத். ஆமாம் அந்தக் கட்டம் உண்மையிலேயே பிரமாதமாகத்தான் படத்தில் பதிவாகியிருந்தது...... ஆனல் உண்மையில்...படப்பிடிப்பு வேளைகளில் சதா கேலியும் கிண்டலும் செய்து கொண்டு கல கலப்பாக ஓடியாடித் திரியும் மைனுவதி (ஹேமா வேடம் தாங்கி நடித்தவர்) தன் கணவனுக நடித்த பிரேம் நசிரிடம் அடி பட்டதும் வலி தாங்காது துவண்டார் என்பது ஏனையோருக்குப் புரியக் கொஞ்ச நேரமாகியது.

நடிப்பில் உணர்ச்சி வசப்பட்டிருந்த பிரேம் நசீர் மைனுவதியின் கன்னத்தில் உண்மையாகவே அறைந்து விட்டார். இத் தாக்குதலை எதிர் பாராத மைனுவதி செய்வதறியாது அதிர்ச்சி அடைந்து விட்டார். அவரைச் சமாதானப் படுத்துவதற்குப் போதும் போதுமென்ருகிவிட்டது.

'ஐயோ வலிக்குதே' என்று மைனுவதி தன கன்னத்தைத் தடவிக் கொடுத்தவாறு பிரேம் நசிரை எரித்து விடுபவர் போல் பார்த்தார். அப்பார்வையால் பொசுங்கி விடாமல் தப்பிக்கொள்ள ஓடிச் சென்று கதாசிரியர் ம. ரா. வின் பருமனை உடலில் மறைந்துகொண்டார்.

'அன்புக்கோர் அண்ணி' படப்பிடிப்பின் போது நடந்த சம்பவமிது.

#### குண்டுக்'கை'

ஓடி வந்த ஜமுனவை முரடர்கள் இருவர் பிடித்து ஒரு கூடாரத்துள்ளிருந்த பெரிய பெட்டியினுள் போட்டுப் பூட்டி விடுகின்றனர். பெட்டிக்குள் மூச்செடுக்க முடியாமல் அந்தப் பாவை துன்பப் பட்டிருப்பாரே என்று எண்ணி விடாதீர்கள். அப்பெட்டியின் பின்புறத்தில் பலகையே கிடையாது.



ஜமுன



பிரேம் நசீர்

"தாய் மகளுக்குக் கட்டிய தாலி" படத்துக்காகத்தான் அன்று விஜயா ஸ்டுடியோவில் இந்தக் கட்டம் நடந்தது.

அந்தக்கட்டம் முடிவடைந்ததும், கண்களில் கண்ணீருடனும், முகத்தில் கோபமும், வேதனையும் போட்டி போட ஜமுன பெட்டியினுள்ளிருந்து வெளியேறினர். இடது கையினல் தனது வலது புஜத்தைத் தடவிக் கொண்டே வந்த அவர் துக்கத்துடன் "சார்! இனிமேல் இந்த முரடர்களுடன் என்னை மோத விடாதிங்க. இங்க பாருங்க என் கையை." என்று தனது வலது புஜத்தைக் காட்டினர் டைரக்டரிடம்.

முரடனுக நடித்த குண்டுமணியின் விரல்கள் ஜமுனவின் வலது புஜத்தில் பதிந்து கன்றிப் போயிருந்தன.

# 1962-ம் வருடத்தில்........ கதாநாயகன்

1962-ம் வருடம் தென்னுட்டில் நாராகி வெளியாகிய படங்களில் கதாநாயகன் பாத்திரத்தில் 10 படங்களில் கல்யாண குமரர் தோன்றியுள்ளார். 5 தமிழ் படங்களிலும், 5 கன்னடப்படங்களிலும் நடித்துள்ளார்.

#### டைரக்டர்

டைரக்டர்களில் ஏ. பீம்சிங் 4 தமிழ்ப் படங்களையும், 2 ஹிந்திப் படங்களையும் டைரக்ட் செய்துள்ளார். பி. ஆர். பந்துலு தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிப் படங்களுள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு படம் டைரக்ட் செய்திருக்கிருர். பி. எஸ். ரங்காவும் தமிழில் 2, தெலுங்கில் 2 ஆக 4 படங்களை டைரக்ட் செய்துள்ளார். மதுசூதனராவ் தெலுங்கில் 4 படங்களை டைரக்ட் செய்துள்ளார்.

#### கதை வசனம்

ஆரூர் தாஸ் மொத்தம் 7 தமிழ்ப் படங்களுக்கு கதை வசனம் எழுதியுள்ளார். தெலுங்குப் படங்கள் 8-க்கு அன்னிசெட்டி கதை வசனம் எழுதியுள்ளார்.

#### இசை

மொத்தம் 17 படங்களுக்கு இசை அமைத்த பெருமை விஸ்வநாதன்-ராமமூர்த்தியையே சாரும்.

#### பாடல்கள்

கவிஞர் கண்ணதாசன் படிப்படியாக மேலேறி பாடலியற்றுவதில் உச்சக் கட்டத்துக்கே போய்விட்டார் எனலாம். மொத்தம் 32 படங்களுக்கு கவிஞர் பாடல்கள் அமைத்துள்ளார்.

படப்பிடிப்பகங்களில் அதிக படத்தைத் தயாரித்தது விஜயா வாஹினி ஸ்டுடியோவாகும். இடைக் காலத்தில் இந்த ஸ்டுடியோ சில மாதங்கள் வேலை நிறுத்தம் காரணமாக மூடப்பட்டிருந்த போதிலும், அதிகமான படங்கள் இங்கேயே தயாரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



'உள்ளத்தை உங்களுக்கு ஒப்படைத்தேன். என் உடலைப் பொன்னலும், புத்தாடையாலும் அலங்கரித்திர்கள் இந்த உடலில் உயிருள்ள வரை உங்களை ஒருநாளும் மறக்கவே மாட்டேன். என்னை நம்புங்கள்' என்று சாவித்திரி சிவாஜியிடம் [illegible] தயாரித்திருக்கும் 'வடிவுக்கு வளைகாப்பு' [illegible] தியேட்டர்ஸ் திரைகளுக்கு விரைவில் வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுக்கும் அழிவுக்கும்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் போராடி இன்று பூரண உரிமை பெற்றுள்ளார்கள். பின்லாந்தில் ஒன்பது வீத மான சுவீடிஷ் மக்கள் 700 வருடம் போராடி சுவீடிஷ் மொழியை இன்று ஆட்சி மொழியாக்கியுள்ளனர். இவ் விதமாக சுவிட்சர்லாந்து, கனடா தென்னுபிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், ருஷ்யா, சைப்றஸ் முதலிய முப்பது இரு மொழி, பன் மொழி நாடுகளில் சிறுபான் மையோருடைய மொழிக ளுக்கு சம உரிமை வழங்கப் பட்டுள்ள காரணம் போரா ட்டந்தான் என்பதை உங் கள் அஞ்சாநெஞ்சங்களில் பதிய வைக்கிறேன்.

## சிதைந்த தீர்மானங்கள்

1955ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் சட்ட சபைகளில் தமிழும் சிங்கள மும் சரிநிகர் சமானமான இடம் பெறுமெனவும், வடக்கு கிழக்கு மாகாணங்க ளில் தமிழிலே நிர்வாகம் நடைபெறுவதோடு நீதிமன் றங்கள் தமிழிலே செயற்படு மெனவும் தீர்மானம் நிறை வேற்றினர். ஆனல் ஏழு ஆண்டு முடிவதற்குள் ஆட் சியாளர் எமக்குச் செய்த அட்டூழியங்களையும், சித்திர வதைகளையும் உலகமே வன் மையாகக் கண்டித்துள்ளது.

எத்துணை ஏவாயுதங்களை எம்மீது ஏவி விட்டாலும் "எமது உரிமை மறுக்கும் ஆட்சி இலங்கையில் நிலைக் காது" என்ற தாரக மந்தி ரத்தை ஆட்சியாளர்க்கு அறைகூவ திரண்டிருக்கும் அனைவரையும் வரவேற்கும் நேரத்தே-

"கொன்றிடல் போலொரு
வார்த்தை—இங்கு
கூறத்தகாதவன் கூறினன்
கண்டீர்"

என்பதற்கமைய கூறத் தகுதியற்ற ஆட்சியாளர் தமிழை அரச மொழியாக வோ, ஆட்சி மொழியா கவோ, ஏற்கமாட்டோம் எனக்கூறும் அதே நேரத்தே —தமிழையும் அரியணை ஏற்றி விட்டோம் என அதி விரைவிலே கூறுவதற்கேற்ற போரை ஆரம்பிப்போம் எனச் சவால் விட இங்கு திரண்டிருக்கும் அனைவரை யும் என் இரு கரம் கூப்பி வரவேற்கினறேன்.

## அறமே கூற்றாகும்

வேலும் வாளும் எமக்குப் புதிதல்ல. அன்பும் பண்பும் எமது அடிப்படை; இன வெறியும், கொடுங்கோலும் பழங் கனவு. அறநிலையும் செங்கோலும் உறுதிநிலை. அல்லவை செய்தார்க்கு அற மே கூற்றுவனுகிய வரலாறு உணராது, தமிழ் பேசுவோ ரின் மொழி, இனம், மதம், கலை, கலாச்சாரம் முதலியன வற்றை வேருடன் சாய்த்து வெற்றி விழாக் காண்போம் எனத் துடிதுடிக்கும் சிங்கள ஆட்சியாளர்க்கு அகில உல கையும் ஆட்டி வைத்த நாசிஸ, பாசிஸ, சர்வாதிகாரி களின் கல்லறைக்கே உலகம் உரிமை கொடா உண் மையை அகிலத்திற்கு எடுத்தோதத் திரண்டுள்ள தியாகிகளே! வாருங்கள் வாருங்கள் என உங்களனை வரையும் வரவேற்றுப் போற்றுகின்றேன்.

## மலையகத்து மறவர் கூட்டம்

பொன் முட்டையிடும் வாத்தினை ஒரே வெட்டில் கொன்று குபேரனுக வர எண்ணிய பேரறிவாளனைப் போல் மலையகத்து வாழும் பத்து லட்சம் மறக்குடித் தமிழருக்குப் புதை குழி தோண்டி விட்டோமென மார்பு தட்டி ஆட்சியாளர் விழாக் கொண்டாடி வீரச் சவால் விட்ட நேரத்தே, சுதந்திர ஆர்வம் பொங்கி, இன விடுதலைக்குத் தம்மைத் தியாகஞ் செய்து தமிழனன்னை யை மீண்டும் அரியணை ஏற்ற, தமிழரசுக் கட்சியின் தொ ழிற் சங்கத்தே ஆயிரமாயிர மாக அங்கத்துவம் கொள் ளும் மலைநாட்டு மறக்குடி வாலிப வீரர்களைக் கரங் கூப்பி வாழ்த்தி ஏத்துகி றேன். இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியோடு மலையக மறவர் கூட்டம் தோளோடு தோள் சேர்ந்து உரிமை முழக்கமிட முனைந்து முன்வந்தது தமிழ் பேசும் மக்களுக்கு புதியதோர் சக் தியை ஊட்டியமைக்காக தமிழன்னையின் சார்பில் வாலிபமுன்னணியின் வணக் கத்தைச் சமர்ப்பிக்கிறேன்,

"மெல்லத் தமிழினிச் சாகும்
—வங்கச் சிங்கள மொழத்தி
லோங்கும்" என ஆர்ப்பரிக்
கும் கொடுங்கோலை எதிர்க்

கும் இக்கட்டத்தே எம முடன் வாழ்ந்து, எமது போராட்டத்திலும் சரிநிகர் சமானமாகப் பங்கு கொண்டு, எமது வாழ்வி லும் தாழ்விலும் ஒத்துழைக் கும் ஒரு பகுதி மக்களைத் தீண்டாதாரென ஒதுக்குதல் செய்யோம், சமத்துவம் அடைய வழி பல காண் போமெனத் திடங்கொண்டு செயலாற்ற முன்வந்த வாலிப முன்னணி இளம் தமிழ் வீரர்களைப் போற்று கிறேன்.

வாலிப முன்னணியின் மகாநாட்டு நிகழ்ச்சிகள் உன் னதமடையப் பங்குகொள்ள இங்கு கூடியுள்ள அனைவரை யும் வரவேற்கும் இந்நேரத் தே சொல்லிலும் செயலே வேண்டியுள்ளதென்ற வேண்டுகோளையும் உங்க ளுக்கு விடுத்து உங்களிடம் இருந்து விடைபெறுகின் றேன். வணக்கம்.

# சம்பள உயர்வு பெறுவதற்கு இனத்தையே விற்பதா?

## சிங்களம் கற்பதில் பயன் எதுவுமில்லை

### வவுனியா வாலிப முன்னணி மாநாட்டுத் தீர்மானங்கள்

அரசாங்க ஊழியர்கள் சுய...ல அடிப்படையில் தம் சம்பள உயர் வுக்காகச் சிங்களம் படிப்பது தமிழினத்தின் வருங்கால உரிமைப் போராட்டத்தைப் பாதிப்பதுடன், தமிழ் பேசும் மக்க ளுக்குத் தாங்க முடியாத வெட்கத்தையும், வேதனையையும் தருவதாக அமைகிறது. ஆகவே தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் கற்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தமிழ் பேசும் மக்கள் சார்பாக இம் மாநாடு அவர்களை வேண் டிக்கொள்கிறது.

யாழ். நகரசபை மண்டபத்தில் வவுனியாப் பட்டினசபைத் தலைவர் திரு ச. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் ஒன்பதாவது தேசிய மாநாட்டின் அங்கமான அரசியல் மாநாட்டில், மேற் குறிப்பிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதர தீர்மானங்களின் விபரம் வருமாறு:- தமிழ் அரசுக் கட்சியின் மன்னர் மாநாட்டின் முடிவுகளுக்கு அமைய, நடைபெறவிருக் கும் போராட்டங்கள் அனைத் திலும் முன்போல் தமிழ் பேசும் பெருமக்கள் பூழு மனதுடன் கலந்துகொள்ள வேண்டும்.

#### ஆசிரியர்களின் அரசியல் உரிமை

ஆசிரியர்களின் அரசியல் உரிமையைக் கட்டுப்படுத் தாது. சகல அரசியல் உரி மைகளும் வழங்கவேண்டும்.

#### மந்திரிமாருக்குக் கறுப்புக் கொடி

உரிமை இழந்த வாழும் தமிழ் பேசும் மக்களின் பகு திகளுக்கு 'தனிச் சிங்களச் சட்டத்தை' அமுல் செய்யும் எந்த மந்திரியையாவது அழைக்கக் கூடாது என்றும், எமது வேண்டுகோளைப் புறக்கணித்து மந்திரிகளை அழைத்தால், அவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டி நமது எதிர்ப்பைத் தெரிவிக்கு மாறு தமிழ் பேசும் மக்களை வேண்டிக் கொள்கிறோம்.

#### இராணுவத்தின் பேயாட்டம்

கடந்த சத்தியாக்கிரகத் தின் பின் தமிழ் மக்கள் வதி யும் பிரதேசங்களில் இரா ணுவத்தினர் நடாத்திய பேயாட்டத்திற்கு இலக்காகி இன்னல் பல பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு இம் மாநாடு தனது ஆழ்ந்த அனு தாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

#### தமிழ் ஆசிரியர் சிங்களம் கற்பதா?

தமிழ் ஆசிரியர்களைச் சிங்க ளத்தில் தேர்ச்சி பெற்றால் அன்றி ஊதிய உயர்வு வழங்க மறுப்பதுடன், கல் விப்பகுதியுடன் ஆசிரியர் களைச் சிங்களத்திலே தொ டர்பு கொள்ள வேண்டும் என்ற ஆட்சிபீடத்தின் முடிவு தமிழ் இனத்திற்கு எவ்வுரிமைகளையும் அளிக் காது என்பதை நன்கு எடுத் துக்காட்டுகிறதாகையால், இந்த முடிவுகளை ஆசிரியர் கள் கடைசி மூச்சுவரை எதிர்க்கும்படி வாலிப முன் னணியின் இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

#### தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம்

பெரும்பான்மையாகத் தமிழ் மக்கள் வாழும் பிர தேசங்களில் திட்டமிட்டு சிங்கள மக்களைக் குடியேற்று வதை வாலிப முன்னணி வன்மையாகக் கண்டிப்ப துடன், அப்பகுதி மக்களுக்கே முதலிடம் கொடுக்கும் வண் ணம் அரசாங்கத்தைக் கோருகிறது.

#### உரிமைப் போருக்கு குந்தகமா?

தமிழ் பேசும் இனத்தை சிறுபான்மை, பெரும் பான்மை என்று பிளவு படுத்தி, உரிமைப் போருக்கு குந்தகம் விளைவிக்க முனையும் சிங்கள சிவப்புவாதிகளின் வலையில் சிக்கிய, ஒரு சில சுயநல விரும்பிகள் தம் மைத் தாமே சிறுபான்மை என்று கூறுவதைக் கண்டிக் கிறது இம் மாநாடு. அதே நேரத்தில் எம் மத்தியில் இப்பாகுபாடுகள் இல்லை என்பதைத்திட்டவட்டமாக வலியுறுத்தவும் விரும்பு கிறோம்.

# மட்டக்களப்பில் துக்கதினம்

மட்டக்களப்பு நகரசபை மாதாந்தக் கூட்டத் தில் தீர்மானித்தபடி 4-2-63ல் நகரசபைக் கட்டி டத்தின் முன்றலிலும், வாடி வீடு, பொதுச் சந்தை, பஸ் நிலையப் பிரயாணிகள் தங்கு மிடம் ஆகிய இடங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. கடை கள் எல்லாம் பூட்டப்பட் டேயிருந்தன, தமிழரசுக் கட்சிக் கிளைக் காரியாலயத்தி லும் வேறு சில இடங்களிலும் கறுப்புக் கொடிகள் பறந் தன. விடுதலை இயக்கத்தி னர் சுவரொட்டிகள் மூலம் துக்க தினத்தையிட்டு சுலோ கங்களை வெளியிட்டிருந்த னர்.

அரசாங்கத்தின் சார்பில் எதுவிதமான கொண்டாட் டங்களும் நடைபெறவில்லை. இந்து ஆலயங்களிலும் விசேட பூசைகள் நடை பெறுவதற்காக அரசாங்கத் தால் வழங்கப்பட்ட உதவிப் பணம் எதுவுமே பெற்றுக் கொள்ளப்படவில்லையாத வால், விசேட பூசைகள் நடைபெறவில்லை.

மூன்று படமாளிகைகளி லும், தமிழரசுக் கட்சியின் வேண்டுகோளுக்கிணங்க படக் காட்சி நடைபெற வில்லை.

## பட்டிருப்பு

பட்டிருப்புப் பகுதிக் கிரா மங்கள் தோறும் துக்கதினம் நன்கு அனுட்டிக்கப்பட்டது. கடைகள் யாவும் பூட்டப் பட்டிருந்தன. கிராமசங்கக் கட்டிடங்களிலும், பல வீடுக ளிலும், பொது டங்களி லும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

## கல்குடா

கல்குடாத் தொகுதியிலு மிருக்கும் கிராமச் சங்கங்க ளிலும், சந்தைகளிலும், இல் லங்களிலும் கறுப்புக் கொடி கள் பறக்கவிடப்பட்டிருந் தன. கடைகளும் பூட்டப் பட்டிருந்தன.

## மன்னார்

மன்னாரில் இம்முறை துக்க தினம் சரித்திரத்தில் இடம் பெறத்தக்க வகையில் அமைந்திருந்தது குறிப் பிடத்தக்கது. இந்து, இஸ் லாமிய, கிறிஸ்தவர்களனைவ ரும் ஒரே முகமாக இத் தினத்தை துக்கதினமாக அனுட்டித்தனர். கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந் தன. பட்டினசபைக் கட்டி டங்களில் கறுப்புக் கொடி கள் பறந்து கொண்டிருந் தன.

## திருகோணமலை

கடைகள் யாவும் பூட்டப் பட்டிருந்தன. அங்கங்கே கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. தமிழ் பேசும் மக்களின் விடுதலைக் காக வேண்டுதல்கள் செய் யும் வண்ணம் பலர் கோயில் களில் அன்றைய தினத்தைக் கழித்தனர்.

அரசாங்க சார்பில் எது வித கொண்டாட்டங்களும் நடைபெறவில்லை.

## முல்லைத்தீவு

முல்லைத்தீவு சந்தையிலும், பல பொது இடங்களிலும், வீடுகளிலும் கறுப்புக் கொடி கள் பறக்கவிடப்பட்டிருந் தன. கடைகள் யாவும் பூட் டப்பட்டிருந்தன. அமைதி யான முறையில் எதுவித அசம்பாவிதமும் இன்றி முல் லைத்தீவில் துக்கதினம் அனுட்டிக்கப்பட்டது.

# தி. மு. க. வை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு இதுதான் நேரம் என்று பதில் அளித்தார். இப்படி ஒன்றை வைத்து மற்றொன்றை நசுக்கப்பார்ப் பது சனநாயகப் பண்புக்கு ஆகாது. தடைச்சட்டம் வேண்டுமா? வேண்டாமா? என்பது பற்றி பல கருத்துக் கள் இருக்கலாம். நெருக்கடி நேரத்தில் சட்டத்தைக் [illegible] சிந்தித்துப் பார்க்க வேண் டும்.





ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14.

டெலிபோன்: 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எதிர்பாராத உதவி

—மேரி லூர்த் பெர்னண்டோ, கிரிலப்பனை—

'வைத்தியர் உதவி தேவை' என்று தகவல் கிடைத்ததும் இரவாயிருக்கிறதே; மழையும் பெய்கிறதே, என்று ஆலோசித்தார் ஒரு வைத்தியர். என்ருலும் வைத்தியரின் மனப் பண்பு அந்த அழைப்பை மறுத்துவிடத் துணியவில்லை.

'என்ன ஆபத்தான நிலைமையோ? வைத்திய உதவியின்றி அபாயம் நேர்ந்து விடுமோ, என்னவோ?' என்று இரங்கியது உள்ளம். மழை கொட்டத் தொடங்கிவிட்டது. குடையைப் பிடித்துக் கொண்டார். சில வைத்தியக் கருவிகளுடனும் சிறிய மருந்துப் பெட்டியுடனும் கிளம்பிவிட்டார். அவரது உதவியாளரோ மருத்துவத்தாதியோ அந்த நடு நிசியில் அங்கு இல்லை. எனவே தனியாகப் புறப்பட்டார்.

தூரத்திலுள்ள ஒரு குடியானவன் வீடு போய்ச் சேர்ந்தார். இவர் உதவியால் ஒரு சிறு குழந்தை பிழைத்துக் கொண்டது. தமது பணி வீணுகவில்லையென்று திருப்தியடைந்தார். ஆனல் அது ஒரு தேசப் பெரும் பணியாகும் என்பதை அந்தச் சமயம் இவர் உணர்ந்தாரில்லை.

பல ஆண்டுகள் கழிந்தன. வயது முதிர்ந்த வைத்தியர் அதற்குள் எத்தனையோ வைத்தியப் பணிகள் புரிந்திருந்தார். ஆனல் மேலே குறித்த இருட்டிலும் மழையிலும் தாம் செய்த வைத்திய உதவி இங்கிலாந்தின் ஒரு பெருந் தலைவனுடைய உயிரைக் காப்பாற்றிவிட்டிருந்தது என்பது இப்போது-பல வருடங்களுக்குப் பின்தான் தெரிய வந்தது. 'நான் அந்தச் சமயம் இப்படி நேரக் கூடும் என்பதைக் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியவில்லை' என்று இந்த வைத்தியர் வெளிப்படையாகச் சொன்னர்.

அந்தக் குடியானவன் வீட்டுக் குழந்தை தான் பிரிட்டிஷ் முதல் அமைச்சராக ஒரு காலத்தில் விளங்கி, தாய் நாட்டிற்குப் பெருந் தொண்டாற்றிப் பேரும் புகழும் பெற்ற திரு. லாய்ட் ஜார்ஜ்.

# தமிழ் மொழியின் இலக்கண வரம்பு

—):(—

—: க. சிங்காரநாதன், தெல்லிப்பளை :—

இலக்கண வரம்புடைமையே நம் தமிழ் மொழிக்குத் தனிச் சிறப்பைத்தருகின்றது. நம் தமிழ் மொழி இன்பம் பயப்பதற்கு இலக்கண வரம்புடைமையும் ஒரு காரணமாகும். முத்தமிழ்ழள் இயற்றமிழை முன் வைத்ததும் இக் காரணம் பற்றியேயாம். ஆதலால் யாம் இலக்கண வரம்பைப் பேணி வளர்த்தல் வேண்டும். நாம் இவ் வரம்புடைமையைப் பேணி வளர்க்காதொழியின் எமது ஒப்பற்ற தமிழ் மொழி இருந்த இடமே தெரியாது அழிந்து விடும். நாம் இலக்கணக் கட்டுப்பாட்டிற் கமையப் பேச வேண்டும்; எழுத வேண்டும். இன்றேல் நாம் தமிழர் என்று இறுமாப்புடனும் பெருமையுடனும் வாழ முடியாது.

ஒவ்வொரு பொருட்களும் தோன்றும் காலத்திலேயே அவற்றின் இலக்கணமும், உடன் தோன்றுகின்றன. தமிழ் மொழியும் அத் தன்மைத்தே. என்று தமிழ் தோன்றியதோ அன்றே அதன் இலக்கணமும் தோன்றியது. தமிழ் என்று தோன்றியது என்பதை அறிய முடியவில்லை. எனவே தமிழ் இலக்கணத்தின் காலத்தையும் நிர்ணயிக்க முடியாது. தமிழ் இலக்கணத்தை இறைவனே எழுதினுர் எனப் பரஞ்சோதி முனிவரும் திருவிளையாடற் புராணத்திற் கூறியுள்ளார். அவ்வாருயின் அதன் தொன்மையையும் பெருமையையும் எம் போன்ற சிறியார் அறிய இயலாது. இக்கால மக்கள் உத்தியோகத்தில் ஆங்கிலத்தைக் கற்பதன்றித் தமிழையும் புறக்கணிக்கிருர்கள். இவர்கள், இலக்கணம் வரம்புடையது என்பதை அறியாது தாங்கள் நினைத்தவாறே எழுதியும் பேசியும் தமிழின் இலக்கணத்தை உதறித் தள்ளுகின்ருர்கள். இவ்வாறிவர்கள் செய்யும்போது வருங்காலத்தில் தமிழ் அழியாதிருக்கவும், அது பெருமையோடு விளங்கவும் மென்று அகத்தியர் தொல்காப்பியர் பவணந்தியாகிய மூவரும் முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என்று இயற்றிய இலக்கண நூல்களின் பெருமை அழிந்தொழிகின்றது.

சிலர் வேறு மொழிச் சொற்களைத் தமிழிற்புகுத்துகின்றனர். பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் பிற மொழிச் சொற்களைப் புகுத்துவதால் தமிழ் மொழி அழிந்துவிடும், சீர்குலைந்துவிடும் என்ற காரணத்தையிட்டே இலக்கண நூல் ஆக்கப்பட்டது. சார்பு நூலாம் நன்னூலில் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினனே" என்ற தொடரை ஆதாரமாகக் கொண்டு தாம் நினைத்தவாறே இலக்கணத்தை அமைத்துவிட எத்தனிக்கின்றனர். இவ்வாறு புதியன புகுத்தல் சான்றேரின் உரிமையன்றி எம்மனேரின் உரிமையன்று. இலக்கண நூலில் கூறப்பட்ட கட்டுப்பாட்டை மீறி நாம் எதையும் புகுத்தல் ஆகாது.

சிலர், இலக்கணம் புலவனின் கற்பனைப் போக்கைக் கட்டுப்படுத்துகிறது: எனவே இலக்கணம் அவசியமில்லையென்று கூறுவர். இவர்கள் இலக்கணத்தின் திறமையை அறியாதோரே. தமிழின் பெருமையை அறிந்தோர் ஒரு சிலரே இன்று இருக்கின்றனர். நாம் இவ்வரிய தமிழை இலக்கணப் பிழையின்றிப் படிப்போமாக. அத்துடன் ஏனைய மொழிகள் இவ்வரிய தமிழோடு எங்ஙனம் பின்னிக்கிடக்கின்றன என்பதையும் ஆராய்ந்து நன்கு வளர்ப்போமாக.

# நல்லாட்சி

—முதல்வனுர்—

நாட்டு மக்கள் எல்லாம்
நல்ல விருப்பங் கொண்டே
கூட்டும் அரசின் ஆட்சி
கொள்ளத் தகுந்த ஆட்சி!

* *

சாதி சமய மொழியில்
சண்டை பகைக ளின்றி
நீதி நிறைந்த சமத்வம்
நிலவும் ஆட்சி நன்று!

* *

நிதியைப் பெருக்கி மக்கள்
வாழ்வின் நிலையை உயர்த்தி
மதியை வளர்க்கக் கல்வி
நல்கும் ஆட்சி நன்று!

* *

குடிகள் கையில் இறைமை,
தனிப்பட்டோரின் உரிமை,
படிமை பேணும் ஆட்சி
பாரிற் சிறந்த ஆட்சி!

---

எனது கிராமம்

## கந்தரோடை

—சி. கணேசவேல் —

எனது கிராமம் கந்தரோடை. இது சுன்னுகம் சந்தியிலிருந்து மேற்கே ஒரு மைல் தூரத்தில் உள்ளது எங்கள் கிராமம் முற்காலத்தில் பல அரசர்களின் இராசதானியாக இருந்தது. எமது கிராமத்தில் உள்ள அத்தனை தமிழர்களும் சுத்த சைவர்களாகவே இருக்கின்றனர்.

எனது கிராமத்திலே, யாழ் நகரிலேயே முதற்தரக் கல்லூரி யொன்ருக விளங்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி (ஸ்கந்தா) இருக்கிறது. இங்கு தமிழ், முஸ்லிம் மாணவர் உட்பட 2500க்கு மேற்பட்டவர்கள் கல்வி கற்கின்றனர்.

கன்னித் தமிழ் காத்து வரும் "கலைச் செல்வி" மாத இதழ் இங்கிருந்து தான் வெளி வருகின்றது. வைத்திய மேதை டாக்டர். சுப்பிரமணியம் பிறந்த மண் எமது கிராமமாகும். இங்கு வியாபாரிகள், கமக்காரர்கள், எழுத்தாளர்கள், அரசியல் வாதிகள் அத்தனைபேரும் அமைதியாக வாழ்ந்து வருகிருர்கள்.

இங்குள்ள இளைஞர் தமிழரசே தமது மூச்சாக இருக்கின்றது மட்டுமன்றி, தமிழுணர்ச்சி மிக்கவர்களும் கூட. சென்ற சத்தியாக்கிரகத்தின்போது இராணுவத்தினரின் கைவரிசைக்கு இலக்காகிய அநேக இளைஞர்கள் எமது கிராமத்தில் உண்டு. எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. தர்மலிங்கம் எங்கள் கிராமத்தைச் சேர்ந்தவர் என்பதில் நாம் பெருமையடைகின்ருேம்.

## இந்த ஊர் தெரியுமா?

—த. யோகராசா, கல்முனை—

1-ம் எழுத்து:- மாங்காயில் உண்டு தேங்காயில் இல்லை.
2-ம் எழுத்து:- மரத்தில் உண்டு கிளையில் இல்லை.
3-ம் எழுத்து:- தம்பியில் உண்டு அண்ணவில் இல்லை.
4-ம் எழுத்து:- உறையில் உண்டு அடையில் இல்லை.

'ரீஷசஜீபா
:ㄱஜரு

---

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

---

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப் பத்திரம்**

இல. 1

பெயர் ______________________

பாடசாலை ______________________

விலாசம் ______________________

______________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்    கையொப்பம்

---

## வளர்மதி புதிய மருமக்கள்

3687 ச. லோகேந்திரன், இந்துக் கல்லூரி, எதிர்கனிட்ட பாடசாலை, யாழ்ப்பாணம்.

3688 ச. தனபாக்கியம், இந்து மகளிர் கல்லூரி, எதிர்கனிட்ட பாடசாலை, யாழ்ப்பாணம்.

3689 சோ. ஸ்ரீதரன், அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

3690 எஸ். சேவியர், தெளிவத்தை தோட்டம், பதுளை.

3691 பெ. பாலச்சந்திரன், 1101/C, டலுப்பிட்டியா வீதி உனுப்பிட்டி, வத்தளை.

3692 அ. அருட்சோதி, அருளகம், ஏழாலை மேற்கு, சுன்னுகம்.

3693 பி. எம். கருப்பையா, கிக்கிரிவத்தை தோட்டம், பசறை.

3694 சி. ரவீந்திரன், அ. மி. பாடசாலை, உடுப்பிட்டி.

3695 எம். எம். இக்பால், விடத்தல் தீவு, மன்னர்.

3696 செ. நாகரெத்தினம், அன்னகன் விடுதி, வத்தாமூலை, செங்கலடி.



பிரேஸில் உதை பந்தாட்டத்துக்குப் புகழ் பெற்றது. பிரேஸிலைச் சேர்ந்த, திறமை மிக்க உதை பந்தாட்ட வீரர் தான் நீங்கள் மேலேயுள்ள படத்தில் காணும் அலான் ஹரான்ஸ்போர்ட். இவர் தமது ஆறு வயதிலேயே உதை பந்தாட்டம் விளையாடக் கற்றுக் கொண்டார். 'விளையும் பயிர் முளையிற்' தெரியுமல்லவா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## இணுவில் தமிழ் சினிமா ரசிகர் சங்கம்

'சினிமாப்படங்களினுல் நாடு பலவழிகளிலும் சீர் திருந்துகின்றது என்பது மறைக்க முடியாத ஒரு உண்மையாகும். நல்ல கருத்துக்களைக் கொண்ட தமிழ்படங்கள் சிலவற்றை மூடநம்பிக்கைகளில் மூர்த்தியாக விளங்கும் சில அரசியல் வாதிகளின் தலையீட்டால் அரசாங்கம் தடை விதித்திருப்பது வருந்தக்கூடிய செயலாகும். "பென் ஹர்" என்ற ஆங்கிலப் படத்தில் யேசுநாதரை காட்டும் பொழுது அவரது முகத்தைக் காட்டாது எவ்வளவு தூய்மையாக காட்டுகின்ருர்கள். அதே போல தமிழ் படங்களிலும் கடவுளைக் காட்டும் கட்டங்களில் மக்களின் மனதில் ஆத்திகம் செத்து நாத்திகம் வளராத அளவுக்கு காட்சிகளைப் புகுத்த வேண்டும். அப்படியான படங்களை தமிழ் தயாரிப்பாளர்கள் இன்னும் தயாரிக்கத் தொடங்காதது தமிழ் சினியா உலகின் பரந்த தன்மையை குறுக்கிக் காட்டுவதாயுள்ளது' இவ்வாறு இணுவில் தமிழ் சினிமா ரசிகர்சங்கத்தின் கூட்டத்தில் உரையாற்றிய திரு. கே. எஸ். ஆனந்தன் குறிப்பிட்டார்.

இணுவில் இளந்தாரி கோயில் சன சமூக நிலைய மண்டபத்தில், சங்கத் தலைவர் திரு. பெ. க. பதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இணுவில் தமிழ் சினிமா ரசிகர் சங்கத்தால் "கலைக் கோயில்" என்று பட்டம் வழங்கப்பெற்ற சிவாஜி கணேசனே 1962-ம் ஆண்டின் சிறந்த நடிகர் என ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1962-ம் ஆண்டின் சிறந்த படமாக 'பாசமலர்'ரும், நடிகர், நடிகையாக சிவாஜி கணேசனும் சாவித்திரியும் தெரிவு செய்யப்பட்டனர். பின் வருவோரும் தத்தம் துறைகளில் சிறந்தவரெனத் தெரிவு செய்யப்பட்டனர்:

சிறந்த துணை நடிகர்: அசோகன் (தாய் சொல்லை தட்டாதே) சிறந்த துணை நடிகை: விஜயகுமாரி (சாரதா) சிறந்த ஹாஸ்ய நடிகர்: தங்கவேலு, சிறந்த ஹாஸ்ய நடிகை: எம். சரோஜா, சிறந்த பாடகி: சுசீலா, சிறந்த பாடகர்: டி. எம். சௌந்தரராஜன், சிறந்த கவிஞர்: கண்ணதாசன், சிறந்த டைரக்ஷன்: பீம் சிங், சிறந்த இசையமைப்பாளர்: விஸ்வநாதன்—ராமமூர்த்தி.

"உள்ளம் என்பது ஆமை" என்ற பார்த்தால் பசி தீரும் பாடல் சிறந்த பாடல் என்றும்தெரிவுசெய்யப்பட்டது.

---

## உதயசூரியன் நாடக மன்றம்

உதய சூரியன் நாடக மன்றத்தினரின் ஐந்தாவது படைப்பான 'மணிபல்லவன்' சரித்திர நாடகம் மாசி மாத இறுதியில் யாழ் நகர அரங்கில் அரங்கேற்றப்படும்.

இந்நாடகம்இலங்கைவாழ் நற்றமிழர் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு வடக்கில் வாழ்ந்த தமிழ் மன்னன் கிழக்கில் வாழ்ந்த சிற்றரசனையும் ஒரே குடையின் கீழ் கொண்டு, மொழியையும் நாட்டையும் பறித்திட எண்ணிய தென்னிலங்கைச் சக்கரவர்த்தியுடன் அன்பு வழியிலே, அறம் வழுவாப் போரிட்டு, நாட்டையும் இனத்தையும் மீட்ட மாமன்னன் மணிபல்லவன் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

---

## பெற்ருர்-ஆசிரிய சங்கக் கூட்டம்

திருகோணமலை ஜமாலியா வீதிச் சந்தியில் இருக்கும் உப்புவெளி மெ. மி. பாடசாலையில் மேற்படி கூட்டம் ஜனுப் ஏ. மீராமெய்தீன் தலைமையில் நடைபெற்றது. தலைமையாசிரியர் தனது அறிக்கையில், இப்பகுதி வாழ் முஸ்லிம்களின் முயற்சியால் எமது பாடசாலைக்கு நேவியைச் சேர்ந்த இரு கட்டடங்களும் 5 ஏக்கர் நிலமும் சிக்கிரம் கிடைத்துவிடுமென நம்பிக்கை தெரிவித்தார். பாடசாலைக்காக ஓர் உபகாரப் படக்காட்சி நடத்துவதென வும் ஆலோசிக்கப்பட்டபின் நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. எஸ். கே. செல்வநயினுர், தலைமை ஆசிரியர், உபதலைவர்: ஜனுப் ஏ. மீராமெய்தீன், காரியதரிசி: எம். வகாப், உபகாரியதரிசி: என் அசன், தனுதிகாரி எம். எம். கனி ஆகியோருடன் அறுவரைக் கொண்ட ஓர் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

---

## பிரிவுபசாரம்

நாளை உலகின் நற்பிரசைகளை உற்பத்தி செய்யும் ஆசிரியர்களான நாம் ஒரே இடத்திலிருந்து சேவை செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையற்று உலகின் நாலாபக்கமும் சென்று சேவை செய்வதுதான் சிறந்தது. இவ்வாறு—வவுனியா பூநதோட்டப் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் உதவி ஆசிரியையாகக் கடமையாற்றி இப்பொழுது வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு மாறிச் செல்லும் ஆசிரியை செல்வி க. இந்திராணிக்கு ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் பெற்ருேர் ஆசிரிய சங்கத்தாலும் நடத்தப் பெற்ற பிரிவுபசாரக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய தலைமையாசிரியர் திரு. நீ. அந்தோனிப்பிள்ளை குறிப்பிட்டார்.

---

## திருகோணமலை தமிழர் முன்னேற்றக் கழகம்

திருகோணமலையில் 25-1-63-ல் நடைபெற்ற தமிழர் முன்னேற்றக் கழக செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

ஈழத் தமிழ் பேசும் மக்களின் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, இவைகளுக்கு உரிமை கிடைக்கும் வரை மாசித் திங்கள் 4-ம் நாளை துக்க தினமாகக் கொண்டாடும்படி ஒவ்வொரு தமிழ் பேசும் மக்களையும் த. மு. கழகம் மிகவும் பணிவன்போடு வேண்டிக் கொள்கிறது.

சுய மரியாதை இயக்கச் சுடரும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரும், தமிழ் இலக்கிய மேதையும், தலை சிறந்த பேச்சாளருமான தோழர் ப. ஜீவானந்தம் அவர்களும், இங்கிலாந்து நாட்டின் ஏழைப் பங்காளரின் ஒப்பற்ற தலைவரும், தொழிற் கட்சித் தலைவருமான நாட்டின் நலனில் நல்லார்வம் காட்டி, உழைத்த நல்ல வருமான தோழர் கெயிடஸ் கெல் அவர்களும் இயற்கை எய்தியமை குறித்துமிக, மிக வருத்தத்தோடு, அவர்களை இழந்து தவிக்கும் அன்னுர்களின் குடும்பத்தார்களுக்கும், மற்றும் எல்லோர்க்கும் த. மு. கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

---

## இலக்கிய ரசிகர் குழுவின் சிறுகதைப் போட்டி முடிவுகள்

இலக்கிய ரசிகர் குழு நடாத்திய சிறுகதைப் போட்டி முடிவுகள் வருமாறு:

முதற் பரிசு ரூபா 100.00

"சிரத்தை" சத்தியன், காரைத்தீவு, மட்டக்களப்பு.

இரண்டாம் பரிசு ரூபா 50.00

'போரும் முடிவும்' யோ. பெனடிக்ற்பாலன், நல்லூர், யாழ்ப்பாணம்.

மூன்ரும் பரிசு ரூபா 50.00

(இருவருக்குப் பகிர்ந்தளிக்கப் படுகிறது.)

"அதர்" மருதூர்க் கொத்தன், மருதமுனை, மட்டக்களப்பு. "மோகத்தைக் கொன்றுவிடு" ஜோர்ஜ் சந்திரசேகரன், கிருண்பாஸ், கொழும்பு.

பரிசுக் கதைகளைத் தவிர பாராட்டுக் கதைகள் ஐந்தினைத் தேர்ந்தெடுக்க இயலவில்லையென்றும், எனவே ரூபா 25 ஆக இருந்த மூன்ரும் பரிசினை, ரூபா 50 ஆக உயர்த்தி இரண்டு கதைகளுக்குப் பகிர்ந்தளித்துள்ளதாகவும் தெரிகிறது.

---

## திருக்கேதீச்சரத்தில் மகாசிவராத்திரி

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையார் இவ்வருடம் (22-2-63)ல் திருக்கேதீச்சரத்தில் நடைபெற வேண்டிய மகா சிவராத்திரி தின ஒழுங்குகளுக்கு தற்பொழுதிருந்தே வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்து வருகின்றனர்.

இந்தியாவில் இருந்தும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் விழா வைபவத்தில் பங்கு பற்றுபவர்களும் யாத்திரீகர்களுமாக பல ஆயிரக் கணக்கான அடியார்கள் வருவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

புகையிரதப் பகுதியார் விசேடப் புகையிரதப் போக்குவரத்துக்களை ஒழுங்கு செய்திருக்கிருர்கள். பஸ் போக்குவரத்துப் பகுதியாரும் யாழ்ப்பாணம், வவுனியா முதலிய இடங்களுக்கூடாக நேரடியாக ஆலயத்திற்குப் போகவும் வரவும் அதிக வாகனங்களை ஒழுங்கு செய்திருப்பதுடன் பல ஊர்களில் இருந்தும் வவுனியா, மன்னுர் போன்ற புகையிரத நிலையங்களிலிருந்தும் யாத்திரீகர்கள் ஆலயத்திற்கு இரவும் பகலும் வந்து போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்து வருகிருர்கள். ஆலயத்திற்கு வரும் யாத்திரிகர்களுக்கு தங்குவதற்கும் சாப்பாடு தண்ணீர் வசதிக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இரவு முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் இந்தியாவிலிருந்தும் இலங்கையில் இருந்தும் பல சங்கீத வித்வான்களும் சொற்பொழிவாளர்களும் பங்கு பற்றுவார்கள் ... ருேம்.

# சிறுவர் கலைக் கழகம் வாசிகசாலை ஆரம்பம்

## உன்மானன்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தான், உன் மானனுனுன். அவன் ஆவலோடு எதிர்பார்த்த தேநீரும் வந்தது.

"பூ; இதுதானு? இதிலும் பார்க்க அந்தத்தூள் தேயிலை எவ்வளவோ தேவலை. "தேநீரைப் பருகிய வேலு, தான் பட்ட சிரமத்திற்காக வருந்தினுன். இடையிலுள்ள பெருச்சாளிகளின் துரைத்தனத்தால், துரை கொடுத்த தேயிலை அவன் வாய்க்குக் கிட்டவில்லை யென்பதைத் தெரிந்து கொள்வதற்கு அவன் தாரிபாரியல்லவே!

(யாவும் கற்பனை)

---

## வேதமென்ன...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டாலே பதில் சொல்லுகிருள் பாவையவள்.

"மாமி மகன்தான் மச்சான்தான் ஓர் முறைக்கு—
மானங்குறைக்க உங்கள் மனதில் எண்ணமாகயிருக்கோ?"

—அவனுல் இதற்கு ஒன்றும் பதில் செல்ல முடியவில்லை. மாட்டைத்தட்டி விட்டான். வண்டி நகர்ந்தது.

இவ்வாறு கிராமியக் கவிகள் மலிந்து காணப்படும் பிரதேசம் மட்டு நகரின் வடபகுதி. எழுத்தறியா மக்களின் எண்ணத்தில் எழும் கவிகளிற்தான் எத்தனை சுவை!

---

விழா நிகழ்ச்சிகளை இலங்கை வானெலி மூலம் ஒலி பரப்புவதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

---

## ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் எதிர் வம்ரு 22-2-63 வெள்ளிக்கிழமை மகாசிவராத்திரி அன்று திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் காலை 7 மணி முதல் மாலை6 மணிவரையும் திருவாசகபாராயணம், தியானம், கூட்டு வழிபாடு இவைகள் நடத்தி அதன் மேல் திருக்கேதீச்சரம் கோவில் வழிபாட்டிலும் கோவிலில் நடக்கும் விசேடங்களிலும் கலந்து கொள்வார்கள். அடுத்த நாள் காலை திருவாசக மடத்தல் மகேஸ்வர பூசையும் நடத்துவார்கள்.

தமிழ் பேசுகின்ற மக்கள் மத்தியிலும், இன்றைய சகல துறைகளிலும் தற்போது அமுலில் இருந்து வருகின்ற நியாயமான தமிழ் உபயோகத் திட்டம் முற்ருக மாற்றப்பட்டு, நம் மத்தியிலே சுதந்திர தமிழ் உபயோக நிலை உருவாக வேண்டும். அப்போதுதான் இன்றைய நமது தமிழ்க் குழந்தைகள் பூரண சுதந்திரத்தை அனுபவிப்பவர்களாவார்கள் இந்த சுதந்திர நிலை நமக்குக் கிடைக்க வேண்டுமானுல் இளம் பராயத்திலிருந்தே நம் சிறுவர்களுக்கு நாம் நல்ல தமிழறிவை புகட்டவேண்டும். நல்ல தமிழறிவை நம் குழந்தைகள் பெறக்கூடிய சூழ்நிலையை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மட்டக்களப்பு சிறுவர் கலைக் கழகம் சிருர்களின் அறிவு வளர்ச்சிக் கேற்ப, ஓர் நடமாடும் வாசிகசாலையை ஆரம்பித்துள்ளது, தமிழ்க் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுமென்றே கருதுகிறேன்.

மட்டக்களப்பு சிறுவர் கலைக் கழகத்தின் ஆதரவில் நடாத்தப்படவிருக்கும் நடமாடும் வாசிகசாலை ஆரம்ப விழாவில் வண. இரத்தின ராசா போதகர் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினுர். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு, பேராசிரியை கங்கேஸ்வரிகந்தையா தலைமை தாங்கினுர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை புத்தகங்களை வினியோகித்து, நடமாடும் வாசிகசாலையை ஆரம்பித்துவைத்தார். மட்டக்களப்பு எம்.பி. செ. இராசதுரை, மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. இரா. நாகலிங்கம், வித்தியாதரிசி திரு பி. சின்னத்துரை மாஸ்டர் சிவலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

---

## யாழ். சைவபரிபாலன சபை 74வது வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் 74 வது வருடாந்தக் கூட்டம் 10—2—63 ஞாயிறு பகல் 10 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

புது வருடத்துக்கான உத்தியோகத்தர் தெரிவும் அன்று நடைபெறுமெனத் தெரிகிறது.


# இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன் 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

## சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளிக்கிழமை 15-ம் திகதி முதல்!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரொக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி) இம்பீரியல் (மட்டக்களப்பு) நடராஜா (நீர்கொழும்பு) கிங்ஸ் (பதுளை) அசோகா (புத்தளம்)

ஜெமினி கணேசன்—சரோஜாதேவி—பாலையா—தங்கவேலு—எஸ். வி. சுப்பையா

# பனித்திரை

சங்கீதம்: கே. வி. மகாதேவன்

பாடல்கள்: கொத்தமங்கலம் சுப்பு, கண்ணதாசன்

பின்னணி: ஸ்ரீனிவாஸ், ஏ. எல். ராகவன், சுசீலா, சீர்காழி கோவிந்தராஜன்

---

## குதூகலமான 5-வது வாரம்!

எல்பின்ஸ்டன் • ரெக்ஸி

திலிப் குமார்—மதுபாலா—பிரிதிவிராஜ் கபூர்—துர்கா கோட்டே நடிக்கும்

# அக்பர்

முகல்-ஏ-அஸாம் என்ற இந்திப் படத்தின் தமிழ்ப் பிரதி

---

## வெற்றிகரமான 11-வது வாரம்!

கெயிட்டி எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—எஸ். வி. ரங்கராவ்—எம். ஆர். ராதா நடிக்கும் **சாரதா**

---

## சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) மற்றும் திரைகளில்

## வெற்றிகரமான 2-வது மாதம்!

பிரசாத் மூவிஸின்

# தாயில்லாப் பிள்ளை

இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்!

பாலையா, மனோகர், கல்யாண்குமார், முத்துகிருஷ்ணன், ராமராவ், எம். வி. ராஜம்மா, விஜயலக்ஷிமி ஆகியோர் நடித்தது

கதை வசனம்: மு. கருணாநிதி எம். எல். ஏ.

இசை: கே. வி. மஹாதேவன்

பாடல்கள்: கண்ணதாசன், கொத்தமங்கலம் சுப்பு, மருதகாசி

(ஜெமினி ரிலீஸ்)

---

## விரைவில் எதிர்பாருங்கள்!

பாரத் புரொடக்ஷன்ஸ்

# விக்ரமாதித்தன்

★ எம். ஜி. ஆர். ★ பத்மினி ★ ஸ்ரீரஞ்சனி ★ தங்கவேலு ★ ராகினி ★ வீரப்பா ★ ஈ. வி. சரோஜா மற்றும் பலர்

டைரக்ஷன்: டி. ஆர். ரகுநாத்

---

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ராஜ் (நீர்கொழும்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

காமினி—வார நாட்களில் தினசரி (மருதானை) பி. பகல் 2-00 மணிக்கு காண்பிக்கப்படும்

★ காதலித்த கன்னியையே கல்யாணம் செய்வது என்று கனவு காண்கிறன் ஓர் வாலிபன்............எனவே

★ மகனது புனர் வாழ்வுக்காகப் போராடுகிறள் தாய்............பின்பு

★ காலத்தின் சோதனையால் அவன் பிஞ்சு இதயத்தில் மலர்ந்த மலர்கள் வாடுகின்றன.............ஆனல்

★ மனம் உடைந்த காதலனுக்கும், வேறு ஒருவனுடன் மணவறையில் உட்கார்ந்திருக்கும் காதலிக்கும் எவ்வாறு "புனர் ஜென்மம்" ஏற்படுகிறது? பாருங்கள்! பதில் கிடைக்கும்!

## சிவாஜி கணேசன்—பத்மினி

மற்றும் பலர் நடித்த

# புனர் ஜென்மம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் [illegible] கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் பெப்ரவரி மாதம் [illegible]0 ம் திகதி ஞாயிறுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.